www.tamilarangam.net

*Januar + Februar*

*1994*

Manitham

# மனிதம்



RAYA
U7 RUE DE ... DES
92000 ASNIE...
- SEI..E : FRAN...

26

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுவிற்சர்லாந்தில் 18வது இலக்கியசந்திப்பு

காலம் : 2, 3, ஏப்ரல் 1994

இடம் : Kirche Pavillion
Oberfeld Ostermundigen - Bern

தொடர்பு முகவரி : MANITHAM
Postfach 12
3000, BERN 11

**சிறப்பு நிகழ்ச்சிகள் :**

- தமிழ் இலக்கியத்தில் நவீனத்துவம் பற்றி – அ. மாக்ஸ்
- தமிழ் இலக்கியத்தில் அரசியல் – அழகலிங்கம்
- சுவிற்சர்லாந்து இலக்கியம் பற்றி ஓர் அறிமுகம் – சுவிஸ் எழுத்தாளர்
- புலம்பெயர்ந்த தமிழ் சிறார்களின் வாழ்வியலும் தமிழ் மொழிக் கல்வியும் – ராஜ்குமார்
- சுவிற்சர்லாந்தில் பெண்விடுதலை இயக்கங்களின் தோற்றமும் தொழிற்பாடும் – சுவிஸ் பெண்நிலைவாதி
- கான சாகரம் – லண்டன் அவைக்காற்றுக்கழகம்

(இந்திராபார்த்தசாரதி, சேரன் ஆகியோரும் தமது ஆக்கங்களை நேரில் சமர்ப்பிக்க உள்ளனர். தலையங்கம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை)

குறிப்பு : சமூகமளிப்பவர்கள் தமது பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்வது விரும்பத்தக்கது.

---

## யாருக்குச் சொல்லி அழ . . . !

சில தினங்களுக்கு முன் வெள்ளை வான் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்களுள் ஒருவரான உமாபிரகாஷ் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதுவும், அதற்கு PLOT வரிந்து கட்டிக் கொண்டு அவர் மீது –கப்பம் கேட்டல், பணம் பறித்தல், அரசுடன் இணைந்து மக்கள் விடுதலை அமைப்பு (PLO) என்ற பெயரில் துணைப் படை அமைத்துச் செயற்பட்டது, வெள்ளை வான் கடத்தலில் ஈடுபட்டது என– பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து தன்னைப் புனிதமாகக் காட்ட முயலும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

உமாபிரகாஷ் என்பவரின் மரணம் ஒரு துரும்பையும் உசுப்பிவிடாது, மாறாக பலரை நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்திருக்கும். என்றாலும் அவர் போல பலர் இன்னும் இருப்பதால் (PLOT உட்பட) நிம்மதிப் பெருமூச்சை விடவும் முடியாத நிலைதான்.

இந்தியாவிலிருந்து.... மணியம் தோட்டம்.... சுழிபுரம்... என்று எங்குமே சித்திரவதை செய்தும் உயிருடன் புதைத்தும் குரூரம் நிறைந்த வரலாற்றைப் படைத்த PLOT இப்படியான அறிக்கைகளை விடுவதன் ஊடாக தன்னை மறைக்க எண்ணும் அப்பாவித்தனத்தைப் பார்க்கும் போது பரிதாபமாக உள்ளது. இந்திய, இலங்கை இராணுவத்துடன் இணைந்து புரிந்த/புரிகின்ற கொடுமைகளும், இப்போது தமிழ் மக்கள் பற்றி –எந்தவித அருகதையற்றும்– அக்கறையாகப் பேசுவதும் அவர்களைப் போன்றவர்களால் தான் முடியும்.

அதெல்லாம் சரி, PLOT இல் இருந்து உமாபிரகாஷ் விலக்கப்பட்டது இருக்கட்டும். PLOT இனர் தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகத் தனத்துக்குப் பின்னும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என ஏன் பெயரிட்டுள்ளனர். அரசுக்கும் இந்தியாவுக்கும் விசுவாசம் நிறைந்தவர்கள் என்ற அடிப்படையில் அந்தப் பெயரை மாற்றலாமே. அவர்களுடன் விடுதலையை நம்பி இருந்த இளைஞர்கள் பலர் கூனிக் குறுகி வெட்கப்பட்டு வேதனைப்பட்டு வாழ்வது அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது, அரசும் இந்தியாவும் போடும் எலும்புத் துண்டுக்கு வாலாட்டுவதைத் தவிர!

–அப்பு

www.tamilarangam.net

JANUAR
+
FEBRUAR

1994

Zwei Monatlich Einmal

*Impressum*
*&*
*Herausgeber :*

Manitham
Postfach-12
3000 Bern -11
SCHWEIZ



# மனிதம்

## உள்ளே .....

- *Last In First Out*
  *(சுவிஸ் தமிழ் அகதிகள்)*
- *புதிய உலக ஒழுங்கு*
- *இலங்கைச் செய்திகள்*
- *தமிழ்ச் சினிமாவும் தேக்கமுற்ற ரசனையும்*
- *விமர்சனம் : ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை*
- *அநீதியே உன் பெயர் தென்னாபிரிக்கா தானோ !*
- *சூரிய சாம்ராஜ்யம்*

**கவிதைகள் :**

- *சிறகுகள் முளைக்கும் நாளில்*
- *அர்த்தமிழந்த வார்த்தைகள்*
- *மௌனத்திரையால் கொடுமையை மறைத்தபடி*
- *கொடுமையின் துயரம்*
- *சதைகளும் முண்டங்களும்*

**நேர் காணல் :**

- *சந்திர சேகருடன்*

**Redaktion :**
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion komitee

**Abonnament :**
**22 SFr**
(pro Jahr)

**Post Konto :**
Manitham
3000 Bern-11
PC : **30-37152-1**

**Bank Konto :**
Schweizerische Kreditanstalt
3001 Bern
**Manitham**
**220348-70**

**Druck :**
Böhlen Druck AG
4912 Aarwangen

www.tamilarangam.net

### சுவிஸ் – தமிழ் அகதிகள் :

# Last in First Out !

ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்பும் முயற்சியில் ஆரம்ப (1983 இல்) காலம்தொட்டு ஈடுபட்டு வந்த நாடுகளில் சுவிற்சர்லாந்து முதன்மைப் பாத்திரம் வகித்துள்ளது. இம் முயற்சி சென்ற ஆண்டின் முற்பகுதியில் இருந்து தீவிரமடைந்து இன்று (12.1.94) இலங்கை அரசுடன் ஓர் ஒப்பந்தத்தை கைச்சாந்திடும் நிலைமைக்கு வந்துள்ளது. ஆரம்பத்தில் ஐரோப்பிய தமிழ் அகதிகளை ஏற்கத் தயக்கம் காட்டிய இலங்கை அரசு இன்று சுவிஸ் அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடுகளின் வெளிப்பாடே இவ் ஒப்பந்தமாகும்.

யுத்தப் பிரதேசத்தினை இலங்கை அரசு Uncleared Areas என பெருந்தன்மையுடன் அழைக்கின்றது. இப் பிரதேசங்களை பிறப்பிடமாகவோ வதிவிடமாகவோ கொண்ட தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் அவர்களை தமது சொந்த இடங்களிற்கு செல்லுமாறு இலங்கை அரசு நிர்ப்பந்திக்கக் கூடாது எனவும், மேலும் அவர்களிற்கென கொழும்பில் அமைக்கப்படும் முகாம்களின் பொறுப்புக்களை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமெனவும், திருப்பி அனுப்பப்படும் அகதிகள் இலங்கைப் பிரஜை என்பதை நிரூபிக்கும் வகையில் அடையாள அட்டை, பாஸ்போர்ட் ஆகியவற்றை உடையவர்களாக இருக்க வேண்டும் எனவும் உடன்பாடு கண்டுள்ளனர். இவ் ஒப்பந்தத்திற்கு நடுவராக ஐக்கிய நாடுகளின் அகதிகளிற்கான உயர் ஆணைக் குழு (UNHCR) நியமிக்கப்பட்டுள்ளதுடன் திருப்பி அனுப்பப்படும் தமிழர்களின் சிக்கல்களை தீர்ப்பதிலும் இது ஈடுபடும் எனவும், திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளின் பாதுகாப்புக் கருதி சுவிற்சர்லாந்து தூதரகத்தின் தொலைபேசி இலக்கமும், விலாசமும் அவர்களிடம் கொடுக்கப்பட இருப்பதாகவும் இவ் ஒப்பந்தம் சார்பாகப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

சுவிற்சலாந்தின் சமஷ்டி அரசின் அகதி ஆணைக்குழுவின் முகாமையாளரான Urs Scheidegger இந் நாட்டில் 25,000 தமிழ் அகதிகள் தஞ்சம் அடைந்துள்ளதாகவும், இந் நாட்டில் நீண்ட காலம் வாழும் அகதி விண்ணப்பதாரர்களிற்கு மாற்றுவழி கையாளப்பட்டதாகவும் அவ்வகையில் 6000 தமிழர்களுக்கு B வதிவிட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களைத் தவிர ஏனையோரே திருப்பி அனுப்பப்பட உள்ளதாகவும், முதல் கட்டமாக இவ்வருட இறுதிக்குள் 600 தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் இவர்கள் முறையே (Last in First out) கடைசியாக வந்தவர்கள் முதலில் என்ற வகையிலேயே திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வகையில் தீர்மானிக்கப்பட்ட சுவிஸ் அரசின் தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளிற்கான உயர் ஆணைக்குழு பச்சைக்கொடி காட்டியது மட்டுமல்லாமல், இவ் ஆணைக்குழுவின் உயர் ஸ்தானிகர், இலங்கைத் தமிழர்கள் பதட்ட சூழ்நிலையால் மட்டும் நாட்டைவிட்டு வெளியேறவில்லை, பொருளாதார நெருக்கடியின் விளைவாலே நாட்டை விட்டு வெளியேறி இருப்பதாகவும், சுவிற்சர்லாந்தில் தலைக்கு 35,000 டொலர்கள் மொத்த சமூக உற்பத்தி உள்ளதாகவும் ஆனால் இலங்கையில் தலைக்கு 550 டொலர்கள் மாத்திரமே மொத்த சமூக உற்பத்தி உள்ளதாக ஒப்பிட்டு தனது கருத்துக்கு உரம் சேர்த்துள்ளார். இவ்வகையில் பார்க்கும் போது ஐக்கிய நாடுகள் சபை மேற்குலக நாடுகளின் நலன்களில் எவ்வளவு அக்கறை செலுத்துகின்றது என்பதனையும் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலவும் நெருக்கடிகளைப் பார்த்து முதலைக் கண்ணீரே வடிக்கின்றது என்பதுவும் தெளிவாகின்றது.

இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் (International center for ethnic studies) பேச்சாளரான சுனில் பஸ்தியான் கூறுகையில்....

"கொழும்பை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் நிலைமைகள் சுமூகமானது போன்று காட்சியளிக்கும். ஆனால் அது உண்மையல்ல. இதனை அரசு மறுத்தால் ஏன் பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுலில் வைத்துள்ளது. இதனை கொழும்பில் நீக்கிவிடலாமே? கொழும்பில் கைதுகள் அடிக்கடி தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. 23 ஏப்ரல் 1993 அன்று லலித் அத்துலத்முதலியின் கொலையைத் தொடர்ந்து 8 வது நாள் பிரேமதாசாவின் கொலை நடைபெற்றது. இவ்வேளையில் 10000 இற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்." என்று கொழும்பில் தமிழர்களின் நிலைமை பற்றி சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

திரு. நீலம் திருச்செல்வம் இக் கைதுகள் பற்றி தெரிவிக்கையில்....

"கைது செய்யப்பட்டவர்களில் பலர் காணாமல் போய்விட்டனர். இக் கைதுகளை மேற்கொண்டோர் பொலிஸ் சீருடை அணியாது இலக்கம் இல்லாத வாகனங்களையே பாவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டனர் என்ற விபரம் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1987 இல் இருந்து 90 வரை மட்டும் 60,000 பேர்கள் வரையில் காணாமல் போய்விட்டனர்." என்கிறார்.

இது சம்பந்தமாக சுனில் பஸ்தியான் மேலும் கூறியதாவது..

"87/90 களில் எவ்வாறு நிலைமைகள் இருந்ததோ அதே நிலைமையே இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த ஒக்ரோபரில் 4 அடையாளம் காணப்படாத பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டது. இதே ஒக்ரோபரில் 6 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 13 வயது இளைஞரும் ஒருவர். இவ் அறுவரும் 4 நாட்கள் ஆகியும் விடுதலையாகவில்லை. இதனைத் தொடர்ந்து சர்வதேச மன்னிப்புச் சபை துரித நடவடிக்கையை முடுக்கிவிட்டது."

சிங்களப் பத்திரிகைகளில் பெரும்பான்மையான பக்கங்கள் புலிகள் பற்றிய செய்திகளிற்கே ஒதுக்கப்படுகின்றன. குறைந்தது ஒரு வாரமேனும் புலிகள் பற்றி பயபீதியுடனான செய்திகளைப் பிரசுரிக்காமல் பத்திரிகைகள் வெளியாவதில்லை.

"கொழும்பை தாக்குவதற்கு புலிகள் திட்டமிடுகின்றனர்."

"தற்கொலை கொமாண்டோக்கள் நகரிற்குள் புகுந்து விட்டனர்."

போன்ற வதந்திகள் பரப்பப்பட்ட வண்ணமே உள்ளன.

கடந்த வருடம் ஆகஸ்டில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுத்தபோது 'திவயின' எனும் சிங்களப் பத்திரிகையின் தலையங்கம் பின்வருமாறு பிரசுரமாகியிருந்தது.

"தீவிரவாதிகள் அகதிகள் வேடத்தில் இலங்கை திரும்புகின்றார்கள். இந் நிலையே சுவிற்சர்லாந்தில் இருந்து திரும்பும் தமிழ் அகதிகளுக்கும் ஏற்படும்."

இனங்களுக்கிடையிலான சமாதானத்திற்கும் நீதிக்குமான அமைப்பின் (MIRJE) தலைவர் சார்ல்ஸ் அபயசேகர கருத்துத் தெரிவிக்கையில்...

அரசினால் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் பேணப்பட மாட்டாது எனவும், எழுத்தில் எல்லாம் நன்றாக இருக்கின்றது ஆனால் நடைமுறைக்கு சாத்தியமா என்பதே கேள்வி எனவும் குறிப்பிட்ட கருத்துக்கள் உற்று நோக்கப் படவேண்டியவையே.

திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகளிடம் சுவிற்சர்லாந்தின் இலங்கைத் தூதரகத்திற்குரிய தொலைபேசி இலக்கம் கொடுக்கப்படும் எனவும், அவசர தேவை ஏற்படின் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூறியுள்ளது. இவ்வாறு யாரும் கைது செய்யப்படும் போது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வது சாத்தியமா? மாறாக, இவ்வாறு கைது செய்யப்படும் போது உறவினரோ, நண்பரோ பொலிஸ் நிலையங்களில் விசாரித்துத்தான் அறிந்து கொள்ளலாம். அதுவும் சாத்தியப்படாத பட்சத்தில் கைது செய்யப்பட்டவர்கள் காணாமல் போனவர் பட்டியலில்தான் சேர்க்கப்படுவர். சுவிற்சலாந்தில் இருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழர்கள் புலிகளின் அங்கத்தவர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்ற சந்தேகம் அரசிடம் உள்ளது. ஆதலால் திருப்பி அனுப்பப்படுபவர்களை மூடப்பட்ட முகாம்களில் வைத்திருப்பதே சாத்தியம். பாலஸ்தீன அகதிகளிற்கு நிகழ்ந்த அதே நிலை தமிழ் அகதிகளிற்கும் நேரலாம்.

இலங்கையில் 250,000 மேற்பட்டோர் 531 அகதிகள் முகாம்களில் உள்ளனர். பெரும்பான்மையானோர் மூன்று வருடங்களாகவே இதே முகாம்களிலேயே வசித்து வருகின்றனர். இதனைத் தவிர 300,000 பேர்கள் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் தஞ்சம் புகுந்துள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்க இலங்கை அரசு ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்தவரையும் ஏற்றுக்கொள்வதென உடன்பாடு கொண்டது நகைப்பிற்குரியது.

இவ்வகையில் சுவிற்சர்லாந்து முதற்கட்டமாக 200 பேரை அனுப்பினால் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் 200 பேராக அனுப்பத் தொடங்குவர். இதே நடவடிக்கை மீண்டும் ஒருமுறை தொடரும். இவ்வகையில் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள 60, 70 ஆயிரம் தமிழ் அகதிகளை இலங்கை அரசு திரும்ப ஏற்கத் தயாரா? என பலர் கேள்வி எழுப்பத் தொடங்கிவிட்டனர்.

"எல்லோரும் கொழும்பு நிலைமையை புரிந்து கொண்டும், பொய்யாகத்தான் கூறுகின்றனர். அதாவது ஓரிரு வருடங்களுக்கு முன் தமிழர்களை திருப்பி அனுப்ப முடியாமைக்கு இருந்த அதே சூழல்தான் இன்றும் காணப்படுகிறது என்பதே உண்மையாகும்" என்று Otto Götsch (இலங்கையிலுள்ள சுவிஸ் திட்டமிடல் அதிகாரி) கூறியுள்ளார். அகதிகள் பிரச்சினையிலும் சுவிஸின் சந்தர்ப்பவாதத்தை இது கோடிடுகிறது.

சுவிற்சர்லாந்து அகதி விண்ணப்பதாரின் சம்பளத்தில் 7 வீதத்தினை தனியே சட்டச் செலவுகளுக்கும், திருப்பி அனுப்பப்படும் சமயத்தில் ஏற்படும் பயணச் செலவுகளுக்குமாக அறவிடப்படுகிறது. அது மட்டுமல்லாமல் ஏற்கனவே தஞ்சம் கோரியவர்களுக்கு அளிக்கப்பட்ட சமூக உதவித் தொகை அவர்கள் வேலை செய்யப்படும் போது அறவிடப்படுகின்றது (சில 'கன்ரோன்கள்' விதிவிலக்காகும்). இவ்வகையில் அகதிகள் பணத்தில் இருந்தே அகதிகளைப் பராமரித்துக் கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று முக்கிய அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு அகதிகளே காரணம் என்கின்றனர். மேலும் பொஸ்னியாவில்இருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் வெளியேறி இங்கு தஞ்சம் புகுந்து கொண்டிருக்கின்றனர். இதனால் ஏனைய நாட்டு அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் இலங்கைத் தமிழர்களில்தான் முதல்தரமாக கைவைக்க ஆரம்பித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் சமாதானம், ஜனநாயகம், மனிதாபிமானம் என்பன பூத்துக் குலுங்குவதாக குரல்வளை கிழியக் கத்துகின்றனர். ஆனால் அகதிகள் பிரச்சனையில் அகதிளை திருப்பி அனுப்புவதே தீர்வு என அடம்பிடிக்கின்றனர். ஆயிரக்கணக்கில் இலங்கையை விட்டு வெளியேறிய தமிழ் அகதிகள் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். எந்த ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிராகவோ அல்லது இன அழிப்பு யுத்தத் தயாரிப்புக்கு எதிராகவோ எந்தவொரு பொருளாதார அரசியல் நெருக்கடிகளைத்தானும் இலங்கை அரசுக்கு கொடுக்காமல் இருந்து கொண்டு தமிழர்களைத் திருப்பி அனுப்புவதில் ஒப்பந்தமாக இருப்பது எந்தவகை மனிதாபிமானம்?

– நரேந்திரன்

## சிறகுகள் முளைக்கும் நாளில் ...

தாய்ப்பறவை
இறுதி நாட்களின் தவிப்பில்
ஈனக் குரல் கொண்டு
என்னை கூப்பிடும்

படுத்த படுக்கையிலாம்
எல்லாம்
ஆயினும்
அதன் நினைவுச் சிறகுகள் மட்டும்
எண்ணாயிரம் மைல்களுக்கு
அப்பாலும் தாவ...

என்னையும் தாக்கும்
பாசக் கயிற்றின் இழுவிசை
முடியவில்லை
சிறகுகள் முறித்தெறியப்பட்ட
குஞ்சுப் பறவை
எங்ஙனம் என் சொந்த மண்ணில்

அம்மா!
பாசக் கயிறுக்கு
பலம் இருக்குமென்றால்
உன் கடைசி உயிர்த்துளியையாயினும்
இறுக கட்டி வைத்துக் கொள்

என் சிறகுகள் முளைக்கும் நாளில்
பறந்து வருவேன்
உன் கண்ணில் ஒற்றி
முத்தமிட.

தீபன்

## அர்த்தமிழந்த வார்த்தைகள்

அமைதி சமாதானம் ஜனநாயகம்
தலைவர் பிரதித்தலைவர்
துரோகி விடுதலை சுதந்திரம்......
அர்த்தமிழந்த வார்த்தைகள் கொண்டு
இன்று என்ன சொல்ல....

யுத்தத்திற்கு பல முகங்கள்
குருதி குடிக்கவும்
உயிர் பிடுங்கவும்
நீண்ட பற்களும் நகங்களும்
ஆயினும்
இதயம் ஒரு சிறு துண்டு கூடக் கிடையாது
குழந்தையின் குடலையும் உருவும்
கூடப்படுத்தவன் குரல்வளையையும் முறிக்கும்

அவர்கள்
அவன் தலையை
சைக்கிள் காண்டிலில் மடக்கி வைத்து
வெட்டி யெறிந்தபோது
நான் அருகில்
புட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்
என் வாய் இதற்கு மட்டுமே

பிணங்களின் மேலே
மேடை போட்டு
வீர காளிக்கு வந்தனம்
கொள்கைப் பிறழ்வில்
கோலோச்சும் மன்னர்கள்
இன்னும்
எல்லைப் புறங்களில்
எதற்கோ காத்திருப்பு!

கொலைக் கலைஞர்கள்
மலிந்த மண்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# புதிய உலக ஒழுங்கு !!

பேர்லின் மதிலை நொருக்கி கிழக்கு ஐரோப்பா முழுவதும் வீசியடித்த ஜனநாயகப் புயல் இறுதியில் சோவியத் யூனியனையே உடைத்தெறிந்த போது வீழ்ச்சியுற்றது. சோவியத்யூனியன் மட்டுமல்ல கம்யூனிசமும் தான் என்று ஆர்ப்பரித்தது அமெரிக்க தலைமையிலான முதாலளித்துவ உலகம். இனி உலகம் முழுவதும் ஜனநாயகமும், அமைதியும் பூத்துக் குலுங்கும் என்றும் இதை புதிய உலக ஒழுங்கு என்றும் பறை சாற்றியது.

லத்தீன் அமெரிக்காவில ( நிக்கராக்குவா உட்பட ) சமாதானமும் ஜனநாயகத் தேர்தல்களும், தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை கறுப்பின மக்களுக்கு ஆட்சி அதிகாரம், பாலஸ்தீனப் பிரச்சனைக்கு தீர்வு, இரசாயான அணு ஆயுத ஒப்பந்தங்கள் என்று தம் மேலாதிக்கத்தை நிறுவக் கூடிய வகையில் புதிய உலக ஒழுங்கை நிர்மாணிப்பதில் அமெரிக்காவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் ஒருபுறம். மறுபுறத்தில் சர்வதேசங்களையும் குலுக்கும் பாரிய நெருக்கடிகள், கொடுரமான போர், பட்டினி, இராணுவ சர்வாதிகார ஆட்சிகள், தேசிய இனப்பிரச்சனைகள், இனக் குரோதங்கள், முஸ்லீம் அடிப்படைவாதம், பெருந் தேசிய வெறிகளுமாக 'என்னைப் பார்'என்று தன் கொடுர முகத்தை வெளிக்காட்டி நிற்கிறது இன்றைய 'புதிய உலக ஒழுங்கு'!

93ம் ஆண்டில் மட்டும் உலகெங்கும் நிகழ்ந்த 50க்கு மேற்பட்ட யுத்தங்கள் இதற்கு மேலும் இரத்த சாட்சியங்கள். இதில் மிகப் பெரிய யுத்தம் கெர்சோ–பொஸ்னியாவில். இங்கே 92 ஏப்ரலில் ஆரம்பித்த யுத்தம் 93 செப்ரம்பர் வரையான காலப் பகுதிக்குள் மட்டும் கிட்டத்தட்ட 2 இலட்சம் மக்களைப் பலி கொண்டும், 18 இலட்சம் மக்களை அகதிகளாக விரட்டியும் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. யார் இந்த பொஸ்னிய முஸ்லிம்கள்? அவர்கள் மீது ஏன் இந்த வன்மம்? என்ற கேள்விகள் மனட்சாட்சியுள்ள எந்த மனிதனையும் உலுக்கவே செய்யும். மதத்தால் அடையாளமிடப்பட்ட முஸ்லீம்கள் என்ற ஒரே காரணத்தால் மொழியால் ஒன்றுபட்ட சேர்பியர்களும், குரோசியர்களும், பொஸ்னியர்களும் அதே மொழியைப் பேசும் முஸ்லீம்கள் மீது பாய்ந்து குதறுகிறார்கள். மூன்று வருடங்களுக்கு முன்பு யூகோஸ்லாவியா கூட்டமைப்பு சிதறி உடைந்தபோது கெர்சோ–பொஸ்னியாவின் குடியரசுத் தலைவர் கூறினார், "நாங்கள் உதைபந்து போல உள்ளோம்" என்று. அவரின் வார்த்தைகள் தீர்க்க தரிசனமாகிவிட்டது. இன்று ஐ.நா வுக்கான பொஸ்னியாவின் தூதுவர் அழுகிறார், நாம் அனாதைகள். அமெரிக்கா உட்பட மேற்குலகம் சேர்பியர்களுக்கு ஆதரவாகவே செயலாற்றுகிறது என்று. இதுவே உண்மை நிலையும் கூட. இஸ்லாமிய இன மரபில் உள்ள சேர்பியர்களுக்கு உதவ வேண்டியது தமது பாரம்பரிய கடமை என்று ரசியா ஏற்கனவே கூறிவிட்டது. தவிர, மேற்கு ஐரோப்பியர்களைப் பொறுத்த வரை கிழக்கு ஐரோப்பாவில் ஒரு யுத்த அரங்காய் பொஸ்சோனியாவை வைத்துக் கொள்வது இவர்களின் மேலாதிக்கத்துக்கு உகந்தது. இதைவிடவும் முக்கியமான இன்னொரு காரணம் ஐரோப்பாவுக்குள் ஒரு முஸ்லீம் நாடு உருவாகிவிடக் கூடாது என்பது. இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் பொஸனியாவின் யுத்தத்தை மேலும் தொடர வைக்கிறது.



பொஸ்சோனியாவுக்கு அடுத்து மிகப் பெரிய அளவிலான இழப்புக்களைக் கொண்ட போர்கள் முன்னைய சோவியத்யூனியனில் இருந்து பிரிந்த குடியரசுகளில் நிகழ்கிறது. ஜியார்ஜியா, மோல்டாவியா போன்ற தேசங்களில் இருந்து பிரிந்து போகும் போராட்டங்களில் முறையே அப்காசியன், Dnjestr பிரதேசங்களும் யுத்தத்தின் பிடிக்குள்.

ரசியப் பெருந்தேசிய வெறியை/மேலாதிக்கத்தை எதிர்க்கும் ஜியார்ஜியா மக்களின் உணர்வலைக்குள் அமெரிக்காவின் ஆதரவுக் கைகோர்த்து களம் கண்ட ஜியார்ஜியா அரசையும் அதன் தலைவர் செவனாட்சாவையும் (முன்னாள் சோவியத்யூனியனின் வெளியுறவு அமைச்சர்) பணிய வைக்கும் காய் நகர்த்தலில் ரசியா அப்காசியன் பிரச்சனையை கையாண்டது. இந்த இராணுவ அரசியல் சதுரங்க விளையாட்டில் படுதோல்வியைச் சந்தித்த செவனாட்சா இன்று ரசியாவிடம் அடிபணிந்ததோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருங்கடலில் நிலையான இராணுவத் தளம் அமைக்க ஜியார்ஜியாவை ரசியாவிடம் தாரைவார்த்திருக்கிறார்.

ரசியாவின் வடகிழக்கே மொல்டாவில் அமைந்துள்ளஉக்கிரைனியர்களும், ரசியர்களும், பெரும்பான்மையாக வாழும் Dnjestr பிரதேசத்தில் ரசிய உக்கிரைன் மேலாதிக்கத்துடன் நடந்த சண்டையில் இன்று இந்த பிராந்தியம் சுதந்திர குடியரசாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ரசியர்களே பெரும்பான்மையாக வாழும் கிறிமியாவும் இன்று உக்கிரையினில் இருந்து பிரியப் போவதாக விடுதலைக் குரல் எழுப்பி நிற்கிறது.

நாகோர்னா–கரபாக் பிரதேசத்துக்காக ஆர்மோனியா அசைர்பைசானுக்கிடையே கடந்த 5 வருடங்களாக நிகழ்ந்து வரும் சண்டையில் இதுவரை 10 ஆயிரத்திற்கு அதிகமானோர் மாண்டு போயினர், 20 இலட்சத்திற்கு அதிகமானோர் அகதிகளாய் விரட்டப்பட்டுள்ளனர். மற்றும் ரசியாவின் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்க கூட்டாளிகளதும் ஈரான் போன்ற முஸ்லீம் அடிப்படைவாத சக்திகளின் தயவிலும் போரிட்டு வெற்றி பெற்ற முஜாதிர் குழுக்கள் இன்று தமக்குள் மோதிக் கொள்வதுடன் மீண்டும் ஆப்கான் யுத்தகளமாக மாறிவிட்டது. இன்னும் இருண்ட கண்டத்தில் (ஆபிரிக்காவில்) மிகப் பெரும் இழப்புக்களை கொடுத்து பல்லாண்டு தொடரும் கொடூர யுத்தத்தால் அங்கோலா, மொசாம்பிக், சூடான், சோமாலியா என்று.......... இராணுவ மோதல்களாலும், பட்டினியாலும் பெரும் இழப்புக்களை சந்தித்து வருகின்றன.

அத்தோடு மெக்சிக்கோ, லத்தீன் அமெரிக்கா (நிக்காரக்குவா, எல்சல்வடோர், குவாத்தமாலா) விலும், ஆசியாவில் இலங்கை, இந்தியா, பர்மா போன்ற பல்வேறு நாடுகளில் இராணுவ சர்வாதிகாரத்துக்கும், இன ஒடுக்குதலுக்கும், சமூக ஏற்றத் தாழ்வுகளுக்குமெதிராக தொடர்ச்சியான யுத்தங்கள். பஞ்சப்பட்ட இந்த 3ம் உலக மக்களின் இழப்புக்கள் குறித்த கணிப்புகள் கூட சரியாக வெளிவராத நிலைமை. வளைகுடா யுத்தத்தின் போது அமெரிக்காவினதும் அவர்கள் தம் கூட்டாளிகளினதும் கரிசனைக்குரியவர்களாக இருந்த குர்திஸ்தான் மக்கள் தமது தாய் மண்ணின் விடுதலைக்கான போரில் சென்ற வருடம் மட்டும் 4200 க்கு மேற்பட்டவர்களைப் பலி கொடுத்தார்கள் துருக்கியில். இவ்வாறு உலகின் பெரும் பகுதிகளில் பல்வேறுபட்ட காரணங்களோடு போரும், பட்டினியும் இலட்சக் கணக்கான மனிதப் பலிகளுமாக உலகம் வெதும்பும் இன்றைய நிலையைத்தான் 'புதிய உலக ஒழுங்கு'என்கிறார்களா?

உண்மையில் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ உலகம் குறிப்பிடும் புதிய உலக ஒழுங்கு என்பதன் தார்ப்பரியம் என்ன? இது இவர்கள் தம் நலனுக்கு இடையூறு இல்லாமல் ஒருவித இராணுவ 'நாட்டாண்மையுடன்' கூடிய வகையில் உலகை இவர்கள் தம் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வர வழி செய்வதுதான். இவர்களின் இந் நோக்கத்திற்கு எதிரான எந்த சக்திகள், தேசங்கள் மீதும் பொருளாதாரத்தடை, பயங்கரவாத குற்றச்சாட்டு போன்ற அழுத்தங்களினூடாக அடிபணிய வைப்பது, அதற்கும் நெகிழாத போது இராணுவ தலையீடுகளை 'ஜனநாயக மீட்பு' என்ற பெயரில் செய்வது லிபியா, சோமாலியா, கெயிற்றி, வடகொரியா என்று பல நாடுகள் இதற்கு ஆதாரமாகிறது.

உலகில் சமூக ஏற்றத்தாழ்வுகள் மிகவும் மோசமான அளவு உயர்ந்து வரும் இன்றைய நிலையில் – எத்தியோப்பியா, எரித்திரியாவில் மீண்டும் 6 இலட்சம் பேர் பட்டினியின் தாக்குதலுக்கு இரையாகப் போகிறார்கள்– இன ரீதியான முரண்பாடுகள் கூர்மையடைந்து வரும், சமகாலத்தில் மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அதிகரித்து வரும் வேலையின்மை, வீடின்மை போன்ற

**GATT சர்வதேச கூட்டு வர்த்தக உடன்படிக்கை. உருவாகப் போகும் ஐரோப்பிய சமூகத்தின் இயக்கத்தை உறுதி செய்யும் இயந்திரம். 117 நாடுகள் இதில் கூட்டு சேருகின்றன. இந்த GATT இன் திட்டமானது தொழிற்துறை வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மேலும் சந்தை வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதோடு குறைந்த விலையில் மூலதனச் சுரண்டலுக்கும் வழி செய்கிறது. இதில் 70 வறிய நாடுகளும் சேர்ந்திருக்கின்றன. GATT இல் இணையும் ஏழை நாடுகள் மேலும் ஓட்டாண்டியாவதே தவிர பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளது. குறிப்பாக ஏழை நாடுகளை இன்னும் சுரண்டும் வகையிலேயே GATT இன் திட்டங்கள் அமைகின்றன –முக்கியமாக ஏழை நாடுகளின் விவசாய உற்பத்திக்கு பெரும் பாதிப்பையே ஏற்படுத்தும். மூன்றாம் உலகில் இருந்து வரும் பதனிடப்படாத மூலப் பொருளுக்கே வரிச்சலுகை. உதாரணமாக கோப்பி கொட்டையாக அனுப்பப்பட்டால் 3வீத வரியும், இதுவே கோப்பித் தூளாக ஐரோப்பிய சந்தைக்கு அனுப்பப்பட்டால் 16 வீத வரியுமாக அறவிடப்படும். இதனால் ஏழை நாடுகள் தொடர்ந்தும் மூலப் பொருட்களாகவே அனுப்பிக் கொண்டிருக்க வேண்டியது தான். GATT இன் திட்டங்களால் தொழிற்துறை வளர்ச்சியடைந்த நாடுகளில் வேலையின்மை பிரச்சினை கொஞ்சம் குறைய வாய்ப்புண்டு. குறிப்பாக இதில் லாபம் அடைபவர்கள் 1. ஐரோப்பிய சமூகம் 2. அமெரிக்கா. 3. ஜப்பான் 4. சீனா.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறு சமூக பொருளாதார நெருக்கடிகளும் இந்த உலகில் தொடர்ச்சியான ஒரு யுத்த பீதியை தோற்றுவிக்கிறது. முன்பு கம்யூனிச பூச்சாண்டியினூடாக ஜனநாயகத்தின் பெயரால் உலகை யுத்த விளிம்பில் நிறுத்தி வைத்து விட்டு, தம் சுரண்டல் நடவடிக்கைகளை உலகெங்கும் சுதந்திரமாய் செய்து வந்தவர்கள் இன்று 'சோவியத்யூனியன்' வீழ்ச்சியுற்ற நிலையில் புதிய தந்திரோபாயங்களினூடாக பிற தேசங்களை –உலகை– கொள்ளையிட முனைகின்றனர்.

***ஒன்று :–*** மிகப் பெரிய சந்தை வாய்ப்புக்களை பெறக் கூடிய வகையில் பெரும்பான்மை நாடுகளை ஒருவித பொருளாதார ஒப்பந்தத்திற்குள் கொண்டு வருவது, அன்றி பிராந்திய மட்டத்திலாயினும் கொண்டு வருவது. 95 ஏப்ரலில் நடைமுறைக்கு வரும் சர்வதேச கூட்டு வர்த்தக உடன்படிக்கை (GATT) இதில் முக்கியமானது. மற்றும் EWR, NAFTA, AFTA, EU என்று மீண்டும் உயிர்த்து வரும் பல அமைப்புக்களைக் குறிப்பிடலாம்.

***இரண்டாவது:–*** ஐநா வின் பாதையின் கீழ் இந்த முதலாளித்துவ உலகின் நலனை முன்னிறுத்தி உலகிலுள்ள எல்லாத் தேசங்களிலும் தலையீடுகளைச் செய்வது (உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் முதல்.... அமைதி காப்பிற்கான ஐநா துருப்புக்கள் வரை பல்வேறு வடிவங்களாக). இந்த வகையில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் நிறைந்த 26 நாடுகளில் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட ஊழியர்களை (அவதானிகள், உதவியாளர்கள், துருப்புக்கள், பொலீசார் என்று.....) நிறுத்தி வைத்திருக்கிறது ஐநா.

இரண்டாம் உலக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் (1945இல்) ஐம்பது நாடுகளை ஒன்றினைத்து உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் என்ற சர்வதேச அமைப்பில் இன்று 184 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. குறிப்பாக பனிப்போர் முடிந்த பிற்பாடு இது அப்பட்டமாகவே அமெரிக்காவினதும் அவர்கள்தம் கூடாளிகளிலுமே தங்கியுள்ளது. சோமாலியாவிலும், பொஸ்னியாவிலும் நிகழும் ஐநா படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் இதை மேலும் வெளிச்சமிடுகின்றது. இன்று பிரச்சனைக்குரிய நாடுகளில் ஐநா வின் தலையீட்டில் கொண்டுவரப்படும் அமைதி, சமாதானத் தீர்வு என்பதெல்லாம் அந்நாட்டின் தனித்துவத்தை.

**வேலையிழந்தோர் தொகை :**

92 இறுதிக்கும் 93 ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெறப்பட்ட புள்ளி விபரம்.
(சனத்தொகையின் விகிதாசாரத்தில்)

| | | | |
|---|---|---|---|
| ஜப்பான் | 2.2 | பிரான்ஸ் | 10.6 |
| சுவிஸ் | 3.1 | கனடா | 11.2 |
| சுவீடன் | 4.9 | பிரித்தானியா | 11.7 |
| ஒஸ்ரியா | 5.2 | அயர்லாந்து(பிரிட்டன்) | 11.7 |
| ஜேர்மனி | 6.1 | அயர்லாந்து | 18.8 |
| நெதர்லாந்து | 7.1 | ஸ்பானியா | 19.9 |
| அமெரிக்கா | 7.3 | இத்தாலி | 9.9 |
| பெல்ஜியம் | 9.5 | அவுஸ்திரேலியா | 10 |
| முன்னைய சோவியத் குடியரசுகள் | 10-15 | முன்னைய செக்கோஸ்லவாக்கியா | 8 |

- இன்று ரசியாவின் 30 வீதமான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழும் இன்னும் 30 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் விளிம்பிலும் உள்ளனர். இதன்படி 8–10மில்லியன் பேர் இன்று வேலையிழந்தோராகக் கணிப்பிடப் படுகிறது.
- ஜேர்மனியிலும், சுவிஸிலும் வேலையிழந்தோர்களின்எண்ணிக்கை (1993 இறுதிக்காலக் கணக்கெடுப்பின்படி) முறையே 4,500,000 உம் 180,239 உம் ஆகும்.
- இந்தியாவின் 40 வீதமான மக்கள் பட்டினியோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
- கடந்த 10 ஆண்டுகளில் உலகில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான இடைவெளி மிகப் பெரியதாகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பான்மை மக்களின் அபிலாசைகளை மறுதலித்து வல்லரசுகளின் —குறிப்பாக முதலாளித்துவ உலகத்தின்— நலனுக்கு ஏற்புடையதாகவே கொண்டுவரப்படுகிறது. இதற்கு இஸ்ரேல், எல்சல்வடோர், சோமாலியா, பொஸ்னியா எனப் பல நாடுகள் சான்று பகிர்கின்றன.

சோவியத்யூனியன் உடைந்த பிற்பாடு உருவான 'பொதுநல அமைப்பிலும்' இராணுவ பொருளாதார ஒத்துழைப்பு என்ற பெயரில் ஏனைய சுதந்திர குடியரசுகளின் மீது ரசியா தன் மேலாதிக்கத்தை நிறுவுவதிலேயே குறியாய் இருக்கிறது. பொதுநல அமைப்பில் ஆரம்பத்தில் இணையாமல் இருந்து வந்த அசைர்பைசான், ஜியார்ஜியா போன்ற தேசங்களும் கூட ரசியாவின் தொடர்ச்சியான நேரடி, மறைமுக இராணுவ பொருளாதார அழுத்தங்களால் இவ் வருடத்தில் பொதுநல அமைப்பில் இணைய முன்வந்திருக்கின்றன. இதற்கு ஜியார்ஜியா, அப்காசியன் பிரிவினைப் போரினூடாகவும் அசைர்பைசான், நாகோர்னா—கரபாக் பிரதேச சண்டையினூடாகவும் கொடுத்த விலை அதிகம்.

சோவியத்யூனியன் மையப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பு முறை இன்னும் ரசியா தன் மேலாதிக்கத்தை சுதந்திரக் குடியரசுகள் மீது திணிக்க வாய்ப்பளித்திருக்கிறது. மேலும் ரசியர்களை பாதுகாப்பது என்ற முழக்கத்தினூடாகவும் இராணுவ தலையிடுகளை செய்யக்கூடிய வகையில் எல்லாக் குடியரசுகளிலும் —ரசியர்கள் செறிவாக— வாழ்கின்றனர்.

ஜேர்மனியில் நாசிசம் தன் இன மேண்மையை உயர்த்தி கிழக்கு, மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா ஈறாக மீண்டும் இன்று வளர்ந்து வரும் நிலையில், ரசியாவில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் வலது சார்பு சுதந்திர ஜனநாயக கட்சியின் வெற்றியும் அதன் தலைவர் விளாடிமீர் செர்னோஸ்கியின் அகண்ட ரசியா இனவெறிப் பேச்சும் ஐரோப்பாவை மட்டுமன்றி உலகையே அச்சம் கொள்ள வைக்கிறது.

ஜேர்மனி, ஒஸ்ரியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள புதிய நாஜித் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள செர்னோஸ்கி தன் அகண்ட ரசியாக் கொள்கைக்கு இராணுவத் தலையீட்டை மட்டும் நம்பியிருக்கவில்லை. மாறாக பொருளாதார மேலாதிக்க கொள்கையையுமே கொண்டிருக்கிறான்.

"யார் எண்ணையும், நிலவாயுவையும் (Gas) வைத்திருக்கிறார்களோ அவர்களே அதிகாரத்துக்குரியவர்கள். பால்டிக் குடியரசுகளை ரசியாவுடன் இணைக்க வன்முறை தேவையில்லை நிலவாயு, மின்சக்தி விநியோகத்தை நிறுத்தி விட்டால் மூன்று நாட்களில் அவர்கள் தாமாக வந்து ரசியாவின் காலடியில் வீழ்ந்து விடுவார்கள்" என்று தன் திட்டத்தை விபரிக்கிறான். ரசியாவின் ஜனாதிபதி ஆவதினூடாகத்தான் தன் அகண்ட ரசியாக் கொள்கையை நிறைவேற்ற முடியும் என்று முழங்குகிறான் சேர்னோவெஸ்கி.

ஜனநாயகத்தையும், சந்தைப் பொருளாதாரத்தையும் ரசியாவில் மீழ அரங்கேற்றும் பணியில் அக்கறைப்பட்ட அமெரிக்காவிற்கும் அதன் கூட்டாளிகளுக்கும் ரசிய பெருந்தேசிய வாதம் முகத்தில் அறைந்து பதில் சொல்லத் தொடங்கியிருக்கிறது. சந்தைப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தாவிடில், ஏற்கனவே உறுதியளித்த உதவிகளைக் கூட தரமாட்டோம் என உலக வங்கியே ரசிய அரசை மிரட்டுகிறது. இன்று அதிகாரத்துக்கு வரத் துடிக்கும் செர்னோவஸ்கியையும் அவனது அகண்ட ரசியா பெருந்தேசியவாதக் கொள்கையைக் கண்டும் அஞ்சி கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதல் பால்டிக் குடியரசுகள் வரை அமெரிக்கா தலைமையிலான இராணுவக் கூட்டமைப்பில் தம்மையும் இணைத்துக் கொள்ளும்படி NATO வை வேண்டி நிற்கிறது.

ஒருபுறம் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ உலகம். மறுபுறத்தில் ரசியப் பெருந்தேசிய வாதத்தின் பிடியில் அகப்பட்டுள்ள முன்னைய சோவியத்யூனியன் குடியரசுகள். ஐக்கிய ஜேர்மனியில் வளர்ந்து வரும் நாசிசம்.... மீண்டும் இராணுவ மேலாதிக்கப் பிரவேசத்தில் ஜப்பான்— நாட்டை பொருளாதாரத்துறையில் முன்னேற்றும் வேகத்தில் உலகின் மிகக் குறைந்த தலா வருமானத்தைப் பெறும் ஏழை நாடுகளின் பட்டியலில் சீன மக்களையும் இழுத்துச் செல்லும் 'டெங்' தலைமையிலான சீன அரசு....

குறிப்பாக அமெரிக்கா, மேற்கு ஐரோப்பாவில் அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், பிற சமூக நெருக்கடிகள் எல்லாம் உலகில் அமைதியின்மையையும் போர்களையும் தொடர்ந்து நிலவச் செய்யும். ஏனெனில் உலகம் பெரும் கண்டங்களாக மட்டும் பிரிந்து கிடக்கவில்லை. வர்க்கங்களாகவும், தேசங்களாகவும், இன—மதங்களாகவும் பிளந்து கிடக்கின்றன. நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் எல்லாம் உலகை இன்று மிக நெருக்கமாக்கிவிடுகிறது. ஒரு தேசத்தின் இறைமையை அச்சுறுத்தும் வகையிலான வல்லரசுகளின் செயற்பாடுகளிற்கு இந்த நவீன தொடர்பு சாதனங்களே நிறையத் துணைபுரிகின்றன. குறிப்பாக இந்த நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் வல்லரசுகளின் பிடிக்குள்ளேயே இருக்கின்றன. இதன் விளைவு :



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகிலுள்ள பிற தேசங்கள் இவர்களின் ஆயுத–பொருளாதார சந்தைப் போட்டி மைதானமாகப் பயன்பட இலகுவாகின்றன.

இந் நிலையில் உயர்ந்த உன்னத மனிதகுலத்திற்கான அமைதியை இந்த வல்லரசுகள் படைத்திடுமா என்ன? இவர்களைப் பொறுத்தவரை தங்களுடைய நலனுக்காக ஏனைய தேசங்களைக் கொள்ளையிடவும் முடியாதபோது (எதிர்ப்புப் போராட்டம் முளைத்தெழும் போதெல்லாம்) பட்டினி போட்டும் குண்டுகள் வீசியும் அப்பாவி மக்களை சாகடிக்கவுமே செய்வார்கள். இதைத்தான் அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ உலகம் ஜனநாயக மீட்பு – பாதுகாப்பு என்ற பெயரில் இன்று உலகம் முழுவதும் செய்து வருகிறது. ஒன்று மட்டும் குறிப்பாய்ச் சொல்லலாம் : கம்யூனிசம் தோற்றுவிட்டது. முதலாளித்துவமே ஜெயிக்கிறது என்ற தமது 'வேதத்தை' அழுத்தமாய் போதிக்க தேவையெனில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாய் ஒடுக்கப்பட்டு வந்த மக்களையும், இவர்களை ஒடுக்கி அடக்கி கொடுர ஆட்சி செய்தவர்களையும் ஒரே மேடையில் சமப்படுத்தி கைகுலுக்கும். ஆம் ஆபிரிக்க கறுப்பினத் தலைவன் நெல்சன் மண்டேலாவுக்கும் வெள்ளையின டிகிளார்க் க்கும் ஒன்றாய் நோபல் பரிசு வழங்கி குதுாகலிக்கிறது இன்றைய புதிய உலக ஒழுங்கு. ஆமாம் இதுவே புதிய உலக ஒழுங்கு!

**–அமுதன்**

## மௌனத்திரையால் கொடுமையை மறைத்தபடி......

**–இரா** *(அவுஸ்திரேலியா)*

எம் தேசம் இருளானது
வானத்து நட்சத்திரமொன்று
பூமியில் வீழ்ந்து மறைந்து போக
நிலவு முகிலில் ஒழித்து
பூமியை கறுப்பாக்கியது.

கார்மேகம் முகில் கூட மறுத்ததனால்
வானமழுது பூமி நனைக்க மறந்தது – ஆனால்
மாந்தரழுது பூமி நனைந்து
பாரெல்லாம் பாலைவனமானது.

தேசமெங்கும் மாளிகை மறைந்து
மயானம் தோன்ற
மயானம் எங்கும் சுதந்திரமாய்
கல்லறைகள் முளைத்தன.

மரமொன்றில் கடைசிப்பூ பூத்தது
பூத்த கணமே – கொடியவர்
பிடுங்கி நெருப்பில் எறிந்தனர்
பார்த்த மரமோ பட்டமரம் போல்
இலையுதிர்த்து தனியாய் நின்றது.

ஆவொன்று கதறியழுதது
பால் மறவா தன் கன்றை
கொடியவர் பிடித்து
கொலைக்காய் அனுப்பினாரென்று

சிறகு முளைக்கா கடைசிக் குஞ்சொன்று
வேடன் விட்ட அம்பிற்கிரையாகி
மடிந்து வீழ்ந்தது மண்ணில்
குஞ்சை இழந்து
தாய்ப் பறவை தனியாய் அழுதது

இலையசைய மரங்கள் விழும்
மயிலாடக் கால்கள் முறியும்
குயில் கூவக் குரலையிழக்கும் – ஆனால்
பிணந்தின்னிக் கழுகுகள் மட்டும்
வானில் சுதந்திரமாய் பறக்கும்

ஆனாலும்,
இன்னும் மனிதர் வாழ்வர்
மின்மினிப் பூச்சியின் வெளிச்சத்தில்
கல்லைப் பிளந்து நீரை எடுத்தும்
பூமியின் அடியில் இருக்கை தேடியும்
மௌனத்திரையால் கொடுமையை மறைத்த படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது போல இ.தொ.கா தலைவர் தொண்டமான் ஒருபோதும் தொடர்ச்சியாக தோட்டங்களுக்குச் சென்று கூட்டங்களில் பேசியது கிடையாது. ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு தோட்டத்திற்குச் செல்கின்றார். தோட்டங்களின் தலைவர்கள், மாதர் அணித் தலைவர்கள், இளைஞர் அணித் தலைவர்கள் எல்லோரையும் சந்தித்து முதலில் கலந்துரையாடுகின்றார். இ.தொ.கா வுக்குள்ளும், அரசுக்குள்ளும் தனது நிலையை நியாயப்படுத்தி கதைக்கின்றார். பின்னர் தோட்ட மக்கள் மத்தியில் ஆக்ரோசமாக உரையாற்றுகின்றார். அவரது உரைகளில் அனல் பறக்கும். ஒவ்வோர் உரையின் போதும் தனக்கு பட்டம் பதவி அல்ல முக்கியம், இந்திய வம்சாவழி மக்களின் நலன்களே முக்கியம் என்றும் இ.தொ.கா வின் அமைப்பு விதிக்கு கட்டுப்படாதவர்கள் இ.தொ.கா வை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அனல் பறக்க பேசுகின்றார். மக்களும் பெட்டிப் பாம்பாக தலைவரின் பேச்சுக்கு உடனடியாகவே கட்டுப்பட்டு விடுகின்றார்கள்.

தலைவரின் இத் திடீர் மாற்றத்திற்கு காரணம் தான் என்ன?

## தொண்டமானின் ராஜதந்திரம்

ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்திற்குப் பின்னர் பதவியேற்றுக் கொண்ட டி.பி.விஜயதுங்கா சிறுபான்மை மக்களின் ஆதரவு இல்லாமல் சிங்கள மக்களின் ஆதரவுடனேயே ஆட்சியை தொடர்ந்து நடத்தலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளார். இதனால் தீவிர சிங்கள இனவாதப் போக்கை எடுத்து சிங்கள இனவாதிகளுக்கு தலைமை தாங்க முற்பட்டார். ஏனைய சிங்களத் தலைவர்களைப் போல தொண்டமானின் பலத்தை இவர் அங்கீகரிக்க முற்படவில்லை. அதனை தட்டிக் கழிக்கவே முற்பட்டார்.

இந் நிலையில் தொண்டமானுக்கு தனது பலத்தைக் காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. தனது பலம் உறுதியாக இருக்கும் மத்திய மாகாணத்தில் அதனைக் காட்ட முனைந்தார். காமினி திசநாயக்காவை தானாகவே அழைத்து "உன்னை முதலமைச்சராக்குவதற்கு நாம் தயார்" என்றும், "பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவினைப் பெற்று தற்போதய முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால் இ.தொ.கா. உறுப்பினர்கள் அதனை ஆதரிப்பார்கள்" என்றும் கூறினார்.

காமினி திசநாயக்காவும் இதன்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைச் செய்தார். 22ம் திகதி நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படும் திகதி தீர்மானிக்கப்பட்டது. தொண்டமானின் செயற்பாட்டை அவதானித்த அரசாங்கம் இ.தொ.கா வைப் பிளவுபடுத்தத் திட்டமிட்டது. இ.தொ.கா வின் பொதுச் செயலாளரான செல்லச்சாமியை விலைக்கு வாங்கியது. அவரூடாக மத்திய மாகாணசபை இ.தொ.கா உறுப்பினர்களில் 8 பேரை மடக்கிக் கொண்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் பட்சத்தில் அரசுக்கு சார்பாக வாக்களிக் வேண்டும் என அவர்களிடம் உறுதி வாங்கப்பட்டது. இதற்காக அவர்களுக்கு தலா 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டதாகவும் பேசப்படுகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும் திகதிக்கு இரு நாட்களுக்கு முன்னர் இ.தொ.கா. உறுப்பினர்களால் தங்களுக்கு பிரச்சினைகள் வரலாம் என அஞ்சி அந்த எட்டுப் பேரும் ஒழிந்து கொண்டனர். இதில் மூவர் கொழும்பிலுள்ள செல்லச்சாமியின் வீட்டிலும், ஐவர் நாவலப்பிட்டியிலும் ஒழிந்து கொண்டதாகப் பேசப்படுகின்றது.

தொண்டமான் முதலில் தமது உறுப்பினர்கள் கடத்தப்பட்டதாகவே நினைத்தார். இதனால் கடத்தப்பட்டதைத் கண்டித்து அறிக்கை விட்டதோடு அல்லாமல் மலையகப் பகுதிகளில் ஒருநாள் பொது வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தார். மலையக தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஆதரவு கொடுத்தமையினால் வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. ஆனால் அடுத்த நாள் ஒழிந்து கொண்ட உறுப்பினர்கள் தாம் கடத்தப்படவில்லை, தமது பாதுகாப்புக் கருதி ஒழிந்திருந்தோம் என அறிக்கை விட்டபோதே தொண்டமான் மேலும் விழித்தெழுந்தார். பிரேரணை தினத்தன்று மாகாணசபைத் தலைவர் வாக்கெடுப்புக்கு விடாது பிரேரணையை முறியடித்தார்.

இந் நிலையில் தனக்கு பிரச்சினை அரசிலிருந்து மட்டுமல்ல தனது அமைப்புக்குள் இருந்தும் வருவதை தொண்டமான் உணர்ந்தார். அரசிற்கெதிராகப் போராடுவதை சிறிது காலம் ஒத்திவைத்து விட்டு அமைப்புக்குள் தனக்கெதிராக உள்ளவர்களை ஓரங்கட்டி தனது தலைமையை நிலைநிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்காக முதலில் செல்லச்சாமியோடு நிற்பவர்களைத் தவிர ஏனைய முக்கியஸ்தர்கள் அனைவரையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சென்னன், நுவரேலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவலிங்கம், மத்திய மாகாண சபை உறுப்பினர்களான கந்தசாமி, இராசரத்தினம், சதாசிவம் மற்றும் ஊவா மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர் தேவராஜ் என்போரே அம் முக்கியஸ்தர்களாவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவர்களோடு மாவட்ட இ.தொகா. தலைவர்களையும் இணைத்துக் கொண்டு தோட்டம் தோட்டமாக கூட்டங்களை நடாத்தி இ.தொகா வின் முடிவை மீறியவர்கள் விலக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். தொடர்ந்து இ.தொகா வின் தேசிய சபைக் கூட்டத்தைக் கூட்டி பொதுச் செயலாளரான செல்லச்சாமியையும், அரசுக்கு ஆதரவு அளித்த மத்திய மாகாண சபை உறுப்பினர்களையும் இ.தொகா விலிருந்து இடைநிறுத்தம் செய்தார்.

தற்போது செல்லச்சாமி தனது இடைநிறுத்தத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் முறையிட்டு இடைக்காலத் தடையை பெற்றுக் கொண்டுள்ளார். தொண்டமானுக்கு எதிராக ஊழல் புகாரையும் தொடுத்துள்ளார். ஆனால் இவையெதுவும் தொண்டமான் கிளப்பிவிட்ட அரசியல் பிரச்சினைக்கு முன்னால் நிற்க முடியாது தோல்வியையே தழுவியுள்ளன.

எதிர்காலத்தில் யு.என்பி.–தொண்டமான் உறவு சீரடையலாம். ஆனால் இடைநிறுத்தப்பட்ட செல்லச்சாமியும், ஏனைய மத்திய மாகாணசபை உறுப்பினர்களும் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பது சந்தேகத்திற்குரியதே.




## மீண்டும் இருந்த இடத்தை நோக்கிச் செல்லும் காமினி

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா இந்த வருட ஜனவரி நடுப்பகுதியில் மீண்டும் யு.என்பி யில் சேர்ந்துள்ளார். தனது கட்சியை யு.என்பி யுடன் சேர்க்கும் நடவடிக்கையின் முதல் அடியாகவே இவர் யு.என்பி யில் சேர்ந்துள்ளார் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

கடந்த வருட மேதினத்தன்று ஜனாதிபதி பிரேமதாசா இறந்ததன் பின்னர் UNP-DUNP இடையிலான முறுகல் நிலை ஓரளவு தணியத் தொடங்கியது. அதன் பின்னரான காலப்பகுதியில் விரைவில் DUNP ஆனது UNP யுடன் சேரும் என்றே அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. இரு கட்சியினரிடையேயும் பிரேமதாசாவும் அவரது நடவடிக்கைகளுமே முரண்பாடுகளாக இருந்தன. இதைத் தவிர வேறு எவ்விதமான கொள்கை முரண்பாடுகளும் அவர்களிடையே இருக்கவில்லை. பிரேமதாசா இறந்த பின்னர் முரண்பாடுகள் அற்றுப்போனதால் அவர்கள் இரு கட்சிகளாக இருப்பதற்கு எந்தவித நியாயப்பாடும் இருக்கவில்லை. இதனாலேயே விரைவில் இணைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இடைக்காலத்தில் UNP க்குள் இருக்கும் பிரேமதாசா விசுவாசிகளினாலும், DUNF க்குள் இருக்கும் லலித் விசுவாசிகளினாலுமே இணைப்பு பின்போடப்பட்டது. எனினும் UNP க்குள் எதிர்நோக்கிய தேர்தல்கால நெருக்கடி, தொண்டமானின் போராட்டம், சந்திரிகாவின் வளர்ச்சி என்பன விரைவில் இணைப்பை உருவாக்கும்படி வற்புறுத்தின.

யு.என்பி க்கு ஏற்பட்ட இந் நெருக்கடியால் ஜனாதிபதி தானாகவே முன்வந்து காமினிக்கு நேசக்கரம் நீட்டினார். விஜயதுங்காவுக்குப் பிறகு ஜனாதிபதியாக வர தனக்கே தகுதியுண்டு என்று கருதுகின்ற காமினியும் நேசக்கரத்தை இறுகப் பற்றிக் கொண்டார். இக் கரம் பற்றலுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் க்கும் கணிசமான அளவு பங்கிருக்கலாம் என்னும் ஒரு கதை பரவியுள்ளது. யு.என்பி யின் தற்போதய நூல் ஜே.ஆர் இடம் இருப்பதனாலும் ஜே.ஆர் இன் செல்லப் பிள்ளையாக காமினி இருப்பதனாலும் இக் கதையை நம்பவும் இடமுண்டு.

மொத்தத்தில் காமினி போய்ச்சேர வேண்டிய இடத்திற்கே போயுள்ளார். எனினும் இதில் ஏமாற்றத்துக்கும் விரக்திக்கும் சிலர் உள்ளாகியுள்ளனர். அவர்கள் வேறுயாருமல்ல, SLFP யும் அதன் தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பல** மாதங்களாக புகைந்து கொண்டிருந்த நெருப்பு, சாம்பலை மெல்ல விலக்கிக் கொண்டுள்ளது. மாத்தையாவின் பிரச்சினை வெளியில் வந்தாயிற்று. இதுபற்றி எழுந்த கதைகள் எல்லாம் வதந்தி என்று வாந்திஎடுத்த பிரச்சாரங்கள் ஓய்ந்து... இப்போ மறுபக்கம் புரண்டு மாத்தையா 'துரோகி' என்று நியாயப்படுத்தும் படலம் தொடங்கியாயிற்று. கிளாலித் தாக்குதல், பூநகரித் தாக்குதல் என்பன கண்முன் காணும் நிகழ்வுகளாக வீடியோ க்களில் ஓட, சனங்களின் முதுகில் தடவி, மாத்தையா விவகாரத்தை ஊட்டும் பணி அவர்களின் கடமையாய்ப் போனது.

மனிதம்–20 இன் ஆசிரியர் தலையங்கம் மாத்தையாவின் விவகாரம் பற்றி தொட்டுச் சென்றதை இங்கு நினைவுகூர்தல் தகும். புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா (மற்றும் சுமார் 350 பேர் வரை) புலிகளின் உளவுப்படை யினால் கைது செய்யப்பட்டதாக எழுந்த செய்திகள் இப்போ ஊர்ஜிதமாகியுள்ளன.

துணுக்காய் வதைமுகாமில் நிலத்தின் கீழ் சிறைவாசம் அனுபவித்த (முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட) புலிகளின் 'கைதிகள்' மேல் மூத்திரம் பெய்தும், தவளை பல்லி பாம்பு போன்றவற்றைப் பிடித்துவிட்டும், வக்கிரமாய் விளையாடி, தூஷண வார்த்தைகள் பேசிய புலிச் 'சிறுசுகள்' மீது கைதிகளுக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சி அனுபவங்களை – கைதுசெய்யப்பட்ட– அந்த இரவு மாத்தையாவுக்குப் புரிய வைத்திருக்கும். சுமார் 15 வயது சிறுவன் மாத்தையா இருந்த (அல்லது காவல் வைக்கப்பட்டிருந்த) வீட்டின் கதவைத் தட்டி, மாத்தையாவின் சேட் இல் பிடித்து இழுத்து, வாகனத்தில் ஏறும்படி தூஷண வார்த்தைகளால் பேசினானாம். மாத்தையா அவனை தள்ளி விட்டாராம்.
அனுபவம் இதைவிட எது வேணும்?

மாத்தையா மீது பத்துக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பட்டியல் சுமத்தப்பட்டுள்ளது. தலைவரையும் இன்னும் 11 உயர்மட்டப் பொறுப்பாளர்களையும்(?) கொல்ல இந்திய உளவுப்பிரிவுடன் சேர்ந்து சதி செய்தார், கிட்டுவின் மரணத்துக்கு காரணமாக இருந்தார், இந்தியாவிடம் காட்டிக் கொடுத்தார்........ என்றெல்லாம் வெளிநாடுகளிலும் பிரச்சாரம் நடக்கிறது.

பிரச்சாரம் என்றால் சற்று விலாவாரியான விடயம்தான். மேல் மட்டத்திலிருந்து அறிக்கைகள் வரும், செய்திகள் வரும், விளக்கம் தேவையில்லை, கண்ணோட்டம்... மதிப்பீடு... விமர்சனம் எதுவுமே தேவையில்லை, கொண்டு திரிவதுதான் பிரச்சாரம் என்று கற்பித்தார்கள். கற்பித்தவர்களுக்கும் தமக்கிது பாதகமாகலாம் என்பது இறுதிவரை புரியமாட்டேன் என்கிறது. மாத்தையா, யோகிக்கும் இது *Too late.*

குற்றவாளிக் கூண்டில் நிற்பவனும் பேச முடியும், அவனுக்காக பேசவும் முடியும். அந்தக் குரல்களும் கேட்கும் இடம்தான் நீதிமன்றம் –உண்மைகளைப் பகுத்தறிய! இப்படி பிழையாக படித்துவிட்டோமோ என்னவோ, மாத்தையாவின் குரலைக் காணவில்லை.

'கிட்டு வருவது பற்றி இந்தியாவிற்கு தகவல் கொடுத்திருந்தோம். இந்தியா நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டது." என்றார் பாலசிங்கம். இப்போ மாத்தையா காட்டிக்கொடுத்தது என்கிறார்கள். சரி, அதை விட்டு விடுவோம். மாத்தையா ஓரம்கட்டப்பட்டது கட்சி கலைக்கப்பட்டது எல்லாம் இந்த சதிக்கு முன்னர் நடந்தவை. ஓரம் கட்டப்பட்ட ஒருவரே புலிகளின் உயர்மட்டத்தில் நடக்கும் விடயங்களைக் காட்டிக்கொடுத்த விடயத்தை எப்படி விளங்கிக் கொள்வது??. "றோ" தவறான தகவலை தந்ததால்தான் நாம வடமராட்சிப் போரில் தோற்றோம். என்று பாலசிங்கம் கூறியதும் இந்த இடத்தில் ஞாபகத்திற்கு வரும். இப்போ மாத்தையா இந்திய உளவுப்பிரிவுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்று பேசுவதை எப்படி விளங்கிக் கொள்வது??.



தை
v
மாசி

1994

❖❖❖

இரு மாதத்துக்கு ஒருமுறை வெளிவரும் இதழ்

www.tamilarangam.net

கிட்டுவுக்கு குண்டெறிந்ததாக ஒரு குற்றச்சாட்டு. சனம் அறிந்த பரம ரகசியம் இது. இன்றுவரை இதை EPRLF தான் செய்தது என்றார்கள். தாங்கள்தான் எறிந்தோம் என்பதை இதுவரை ஏற்றுக்கொள்ளவே இல்லை, விடாப்பிடியாக மறுத்தே வந்துள்ளனர். மாத்தையா விவகாரம் எழுந்தவுடன் வாயைக் கொப்பளித்துக் கொண்டார்களோ... என்னவோ..... மாத்தையாதான் காரணம் என்பதை வசதியாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

இந்த விவகாரத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட EPRLF உறுப்பினர்களை மீள உயிர்ப்பிக்க முடியுமா, என்ன! இவர்களின் குடும்பத்திற்கு என்ன நட்டஈடு என்பதையாவது 'நீதிமன்றம்' அறிவிக்குமா? இவ் விவகாரம் பற்றிய மாத்தையாவினது கூற்றுக்களை நீதிமன்றம் பகிரங்கமாக வெளிவிடுமா? என்றெல்லாம் ஒரு சராசரி மனிதன் கேட்க வாயெடுப்பான்.

பதில் தெரிந்ததுதான்..... என்றாலும் கேட்கப்படவேண்டிய கேள்விகள் இவை.

புலிகளுக்கு எதிரானவர்களை மட்டுமல்லாது, ஜனநாயக சக்திகளையும் கைது செய்வது... சிறையில் தள்ளுவது.... தூஷண வார்த்தைகளால் கீழ்த்தரமாக பேசுவது.... அரசுக்கு தகவல் கொடுத்தார்கள், இந்தியாவிற்கு உளவு சொன்னார்கள் என்றெல்லாம் பிரச்சாரங்களை அவிழ்த்துவிடுவது.... பின் கொல்லுவது..... கொலை செய்யப்பட்டவரின் உடைகளை, பொருட்களை வீட்டாரிடம் கொடுத்து விடுவது என்றெல்லாம் நடந்துகொண்டவர் மாத்தையா. இன்று இதேபாணியில் பலியாகுவோர் வரிசைக்குள் அவரும் தள்ளப்பட்டிருக்கிறார்.

தான் பிரதித் தலைவர் பதவியில் இருந்த காலத்தில்...., தாண்டிக்குளத்துக்கு அருகில் மைதானமொன்றில் பகிரங்கமான முறையில் சிலரைக் கொணர்ந்து மரணதண்டனை கொடுத்ததோடு மட்டும் நின்றுவிடாது, இவர்களில் ஒருவரின் தலையை வெட்டி அங்கு நின்ற பெண் ஒருவரிடம் கொடுத்து தாண்டிக்குள இராணுவ முகாமுக்குள் கொண்டுபோய் கொடுக்கும்படி கட்டளையிடும் அளவுக்கு குரூரமானவனாக நடந்துகொண்டார்.

மாற்று இயக்கத்தவரை உயிருடன் கொழுத்தி கொலை செய்து பிரச்சனைக்கு(?) முடிவுகட்டியதில் மாத்தையாவிற்கும் பெரும் பங்கு உண்டு. இந்தியப்படை கைது செய்த (நரேன், குமரப்பா உட்பட) 17 பேருக்கும் (மாத்தையா) சயனைட் கொடுத்து தற்கொலை செய்வித்ததை புரிந்து கொண்டால்.... மாத்தையாவின் மரணதண்டனை ஒன்றும் புலிக்கு அசாதாரணமானதல்ல என்பதையும் புரிந்து கொள்ளலாம். ஆனாலும் புலிகளின் உயர்மட்டங்களால் பழிவாங்கப்படும் புலிகள் 'தியாகி' களாகவே சாகடிக்கப்பட்டனர். மாத்தையா எல்லாவற்றிற்கும் வட்டி கட்டுகிறார். 'துரோகி' யாகவே சாகடிக்கப்படுகிறார்.

இரண்டாம்கட்ட தலைமைஎன்பது புலிகளின் பொறிக்கிடங்கு. இதற்குள் மாத்தையாவும் விழுந்துவிட்டார். மாத்தையா தானாகவே அதற்குள்போய் விழுந்தாரா, அல்லது இயக்கத்துக்கான உழைப்பு, அர்ப்பணிப்பு, ஆற்றல்.... என்பவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட அவரின் வளர்ச்சி அதற்குள் தள்ளிவிட்டதா என்றகேள்விக்கு விடை காண்பது கடினமான விடயம். ஆனாலும் இது புலிகளிலுள்ள போராளிகளும் புலிக்காக உழைப்பவர்களும் முக்கியமாக விடைகண்டுகொள்ள வேண்டிய விடயம். நேற்றுவரை தியாகியாக அதுவும் உயர்மட்டத்தில் இருந்த மாத்தையா இன்று துரோகியாக பெயர் எடுக்க முடியுமென்றால் இவர்களுக்கெல்லாம் எவ்வளவு நேரமாகும்?. ஒரு பகிரங்க விசாரணையை இவர்கள் கோருவது அவர்கள் சரியான மதிப்பீடுகளுக்கு வர உதவும். மாறாக விசாரணை முடிந்தபின் வரும் 'ஒப்புதல் வாக்குமூலத்தை' அல்ல.

இருண்டவன் கண்ணுக்கு மருண்டதெல்லாம் பேய். போராளிகளுக்கு இடையிலான உறவுகள், ஐக்கியம் என்பவற்றினூடகவே பரஸ்பர கண்காணிப்பு நிலவ வேண்டும். நடைமுறைகள், இலட்சியங்கள் என்பன மக்கள் சார்ந்து இருக்கும்போது இது செழுமை



**சந்தா விபரம் :**

தனிப்பிரதி : 3 SFr
வருட சந்தா : 22 SFr

ஐரோப்பிய நாடுகளிற்கு ....
-25 SFr

Postcheck Konto :
30-37152-1
Manitham

Bank Konto :
Schweizerische
Kreditanstalt
3001 BERN
Nr- 220348-70

இலங்கை இந்தியா
-இலவசம்

www.tamilarangam.net

பெற்று பக்குவப்பட்ட போராளிகளை வளர்த்தெடுக்கும், அமைப்பைக் காப்பாற்றும். இவைகளெல்லாம் தலைகீழாக்கப்பட்டால் விளைவு என்னவாகும் என்பதை சகல இயக்கங்களுக்குமே வரலாறு படிப்பித்துக்கொண்டிருக்கிறது.

உள்முரண்பாடுகளைத் தீர்ப்பதிலும், இயக்கத்தின் தவறுகள் அம்பலமாகும்போது அதனை தலையில் கட்டிவிடுவதிலும் கீழணியில் தொடங்கிய மரணதண்டனை தலைமைக்கு அடுத்த மட்டம் வரை வந்துவிட்டது. இரண்டாம் கட்ட தலைமையை நோக்கி வருபவர்கள் ஓரம்கட்டப்படுவதிலிருந்து மரணதண்டனைக்கு இடமாற்றம் பெறுகிறார்கள்.

புலிகளின் இனச்சுத்திகரிப்புக்கு முலாம் பூசி, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள்மீது –ஒரு சமூகம்மீது– துரோகிகள் பட்டம் சுமத்தி வாய்கூசாமல் பேசியவர் யோகி. "40 வயதுக்கு உட்பட்டவரெல்லாம் ஆயுதம் தூக்க வேண்டும், மற்றவரெல்லாம் விமர்சனம், கிமர்சனம் எண்டு நில்லாமல் சும்மா வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேணும்" என்று யோகி பகிரங்கமாக பேசினாரே. பரிதாபத்துக்குரிய இந்த வசனங்களைப் பேசிய யோகியும் விசாரணையில்.

பேச, எழுத, விமர்சிக்க மறுத்த உரிமைகளெல்லாம் இன்று இவர்களது உயிருக்காக மாற்றப்பட யாரால் முடியும்? அல்லது யார்தான் இவர்களுக்காக அழப்போகிறார்கள். வினை விதைத்தவர்கள் வினை அறுக்கிறார்கள். திரும்ப திரும்ப வரலாறு கற்பிப்பதை உதாசீனம் செய்பவர்களுக்கு அது தண்டனை வழங்கத் தவறியதில்லை –அது யாராயிருந்தாலென்ன!

## எதிர்க்கப்பட வேண்டியது

பாரிஸ் ஈழநாடு காரியாலயம் அண்மையில் (ஜனவரி மாத நடுப்பகுதியில்) எம்மவராலேயே எரியூட்டப்பட்ட விடயம் அதிர்ச்சி தரக்கூடியது. சொந்த நாட்டிலும் பத்திரிகைச் சுதந்திரத்துடன் விளையாடிய இயக்கங்கள் (இலங்கை, இந்திய அரசு உட்பட) எல்லாமே அதன் குரல்வளையை நசித்து கொலை செய்தன. ஜனநாயக உரிமைகளை பறிப்பதை கற்றுக் கொடுத்த இயக்க உறுப்பினர்களும், கற்றுக் கொண்ட ஆதரவாளர்களும் தமது விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் இதில் தலையிடுகின்றன. கருத்துக்களை கருத்துக்களால் முகம்கொடுப்பதற்குப் பதிலாக இப்படியான குறுக்கு வழியை நாடுவது ஒரு இயலாமையின் வெளிப்பாடுதான்.

பாரீஸ் ஈழநாட்டுடன் எமக்கு கருத்து ரீதியில் முரண்பாடுகள் இருக்கின்றன. ஆனாலும் எழுத்துரிமையை மறுக்கும் எந்த செயலும் எவ்வித முன்நிபந்தனையுமின்றி எதிர்க்கப்பட வேண்டியதே. இந்த வகையில் ஈழநாடு காரியாலயம் எரியூட்டப்பட்டது கண்டிக்கப்பட வேண்டியது.

அதேநேரம் தாம் ஆதரிப்பவர்களோ அல்லது தமக்கு ஆதரவானவர்களோ மற்றவர்களது பத்திரிகைச் சுதந்திரத்தில் கைவைப்பதை பத்திரிகைகள் கண்டும் காணாமல் நடந்து கொண்டுவிட்டு, தமக்கெதிராக அது திரும்பிவிடும்போது மட்டும் குரல் எழுப்புவது நேர்மையான செயலுமல்ல. இப்படியான அடிப்படை ஜனநாயக உரிமைகளை பறிப்பதையும், பறிபோவதையும் அதன் சமூகப் பெறுமதியையும் மக்களுக்கு புரிய வைப்பதிலும் தாம் புரிந்து கொள்வதிலும் பத்திரிகைகள் அக்கறைப்படாது, விசமிகளின் செயல் என்ற அடிப்படையில் மட்டும் எதிர்ப்பது என்பது அவர்களுக்கு எதிரானவர்கள் இதை செய்வதற்கான அங்கீகாரத்தையும் சாராம்சத்தில் தன்னகத்தே கொண்டுள்ளதையும் பார்க்க தவறக்கூடாது.

– ஆர் குழு

**வாசகர்களே !**

இம் முறை "இ.தொகாவும் மலையக மக்களும்" தொடர் இடப் பற்றாக்குறை காரணமாக இடம் பெறவில்லை. அடுத்த முறை வழமைபோல் இடம் பெறும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

# அநீதியே உன் பெயர் தென் ஆபிரிக்காதானோ ?

*—வரதன்—*





தென் ஆபிரிக்க நிறவெறி அரசானது தனது நிறவெறிக் கொள்கையில் மாற்றத்தினைக் கொண்டு வரவேண்டி ஏற்பட்ட நெருக்கடிகளை பின்வருமாறு நோக்கலாம்.

**1)** முப்பது வருட காலமாக தடைசெய்யப்பட்ட சூழ்நிலையிலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸானது மாபெரும் மக்கள் இயக்கமாக அடைந்த நாடு தழுவிய வளர்ச்சியும், அதன் வெகுஜனப் போராட்டமும்.

**2)** ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கும், தென் ஆபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையேயான ஐக்கியம் நாட்டை கம்யூனிச பாதைக்கு இட்டுச் செல்லுமென நிறவெறி அரசும் அதன் அடிவருடிகளும் கருதியமை.

**3)** தென் ஆபிரிக்க கறுப்பின மக்களின் வெகுஜனப் போராட்டங்களையும், ஆயுதப் போராட்டங்களையும் எதுவித வேறுபாடுமின்றி படுமோசமாக அடக்க மேற்கொண்ட நடவடிக்கைகளால் சர்வதேச ரீதியில் —குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்— தென்னாபிரிக்காவிற்கு எதிரான கண்டனங்களும், ஐக்கிய நாடுகள் சபையில் அதற்கெதிராக பொருளாதாரத் தடையைக் கொண்டு வர முனைந்த முயற்சிகளும் மற்றும் இந்தியா உட்பட பல நாடுகள் தென்னாபிரிக்காவுடனான தமது வர்த்தக உறவுகளை துண்டித்துக் கொண்டதால் தென்னாபிரிக்காவின் பொருளாதாரம் பாதிப்படைந்தமை.

**4)** கறுப்பின வலதுசாரிகளின் தோற்றமும் வெள்ளையர்கள் மீதும் கறுப்பின மிதவாத அமைப்புக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும்

**5)** வளர்ச்சி அடைந்து வரும் கறுப்பின மக்களின் போராட்ட நடவடிக்கைகள் காரணமாக வெள்ளை இன மக்கள் ஆபிரிக்காவில் வந்து குடியேறுவதும், மூலதனத்தை இடுவதும் பாரியளவில் வீழ்ச்சியடைந்ததுடன் யுத்தத்தினது அச்சம் காரணமாகவும் அநேக வெள்ளை இன புத்திஜீவிகள் நாட்டைவிட்டு வெளியேறவும் நேர்ந்தமை.

போன்ற பல்வேறு நெருக்கடிகளை தென்னாபிரிக்க அரசு சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

இவற்றோடு இன்று சர்வதேச அரங்கில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் புதிய உலக ஒழுங்கு அமைப்புக் கொள்கையையும் தென்னாபிரிக்க அரசியல் மாற்றத்தின் பின்னணியில் செயற்படக் கூடிய வாய்ப்புக்கள் நிறையவேயுண்டு. தென்னாபிரிக்காவில் இதுவரையில் நடைமுறையிலிருந்து வந்த நிறவெறி ஆட்சி முறையானது உலகின் வேறெந்தவொரு நாட்டினதும் பிற்போக்கு ஆட்சி முறையுடனும் ஒப்பிட முடியாத கேவலமான ஆட்சி முறையாகும். இன்று உலகின் சமாதான நாயகர்களாக தம்மைக் காட்டிக் கொள்ளும் அமெரிக்காவும் மேற்குலகவும் இதை எவ்வகையிலும் நியாயப்படுத்தவோ ஆதரிக்கவோ முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனவே இவ் ஆட்சியில் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் கறுப்பின மிதவாத சக்திகளை அரசாங்கத்தில் அங்கம் பெறச் செய்து என்றுமே தமக்குச் சார்பான அரச வடிவத்தைப் பேணுவதிலும் அதன் மூலம் தமது சுரண்டலை உறுதி செய்து கொள்வதுமே இவர்களின் நோக்கமாகவுள்ளது. பழைய மாதிரியான ஒடுக்கு முறைகள் இன்றைய வளர்ச்சியடைந்த சமுதாய சூழலுக்கு ஒத்து வராமையினால் அதற்கான பலமான எதிர்ப்புக்கள் தோன்றுவதும் அதனால் தமது மூலதனம், மூலப்பொருள் சுரண்டல், அரசியல் இராணுவ மேலாண்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன்றவை அச்சுறுத்தலுக்கு உள்ளாவதால் புதிய ஒடுக்கு முறை வடிவங்களை கண்டாக வேண்டிய தேவை இச் சக்திகளுக்கு எழுந்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே இன்றைய ஜனாதிபதி கிளார்க் தனது அரசியல் அமைப்பில் பின்வரும் மாற்றங்களை படிப்படியாக மேற்கொண்டார். அதைப் பின்பற்றி ஆபிரிக்க தேசிய காங்கிரசும் தனது கடந்த கால அரசியல் கொள்கையில் மாற்றத்தை செய்து வந்தது.

இரண்டு விடயங்களையும் பின்வருமாறு நோக்கலாம்.

✍ 1989ம் ஆண்டு செப்ரெம்பர் 14ம் திகதி தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாக கிளார்க் தெரிவு செய்யப்பட்டார்.

✍ 1990ம் ஆண்டு பெப்ரவரி 2ம் திகதி ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மீதான தடை நீக்கம் செய்யப்பட்டது. 11ம் திகதி நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

✍ 90 மே 2–4 வரை தென்னாபிரிக்க அரசிற்கும், தென்னாபிரக்க தேசிய காங்கிரசுக்கும் இடையே முதற்தடவையாக கறுப்பின மக்களும் வெள்ளையின மக்களும் நிறபேதமற்று தென்னாபிரிக்க அரசியலில் பங்கு கொள்வது பற்றிய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றது.

✍ ஆகஸ்டில் இடம்பெற்ற இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையின் போது ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மீதான ஆயுதம் தாங்கிய தாக்குதல் நிறுத்தப்படும் எனவும் இதுவரையில் அரசியல் கைதிகளாக சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்வதெனவும் அரசு ஏற்றுக் கொண்டது.

✍ 1913ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 87 வீதமான தென்னாபிரிக்காவின் நிலங்கள் சிறுபான்மை வெள்ளையருக்கும், மீதி 13 வீதமான நிலம் 75 வீதமான கறுப்பின மக்களுக்குமென இருந்த சட்டத்தை செல்லுபடியற்றதாக ஆக்குவதென்றும், தென்னாபிரிக்காவில் கறுப்பர்களும் வெள்ளையர்களும் எப்பகுதியிலும் குடியேறி வாழலாம் என்றும் சட்டத்திருத்தம் 1991 யூன் 5ம் திகதி கொண்டுவரப்பட்டது. இதே மாதம் 27ம் திகதி நிறபேதமான ஆட்சி முறையை தடைசெய்வதற்கான 46வது சட்ட மூலத்தில் அதிபர் கிளார்க் கைழுெத்திட்டார். அத்துடன் நிறபேதம் பாராட்டுவது சட்டரீதியாக தடைசெய்யப்பட்டது.

✍ 1991 யூலை மாதம் நடைபெற்ற ஆபிரிக்க தேசிய காங்கிரசின் மகாநாட்டில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் நெல்சன் மண்டேலா கட்சியின் உத்தியோகபூர்வ தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன் தென்னாபிரிக்க அரசுடன் சேர்ந்து தமது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து கையாள்வதற்கு கட்சியால் அனுமதி வழங்கப்பட்டது.

✍ 1991 டிசம்பர் மாதம் 20ம் திகதி ஆபிரிக்க தேசிய காங்கிரசும் தென்னாபிரிக்க அரசும் உட்பட பல கறுப்பின, வெள்ளையின மக்களின் 19 அமைப்புக்களைக் கொண்ட "ஜனநாயக தென்னாபிரிக்காவிற்கான காங்கிரஸ" ஒன்று அமைக்கப்பட்டது. இதை கறுப்பின வலதுசாரி இயக்கமென கூறப்படும் இங்காதா (INKATHA) மற்றும் வெள்ளை இன வலதுசாரி அமைப்புக்களும் பகிஸ்கரித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

✍ 1992 மார்ச் 17ம் திகதி கறுப்பின மக்களும் தென்னாபிரிக்க அரசியலில் பங்கு கொள்வதற்கான, வெள்ளை இன மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக ஜனாதிபதி கிளார்க்கினால் வெள்ளை இன மக்களிடையே நடாத்தப்பட்ட வாக்கெடுப்பிற்கு 68.7 வீதமான வெள்ளை இன மக்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர். இது கிளார்க்கினது அரசியல் மாற்றங்களை தொடர்ந்து மேற்கொள்வதற்கான அங்கீகாரம் மட்டுமன்றி வெள்ளை இனத்தவரில் பெரும்பான்மையினர் கறுப்பின மக்களுடன் சேர்ந்து வாழ விரும்புவதன் வெளிப்பாடுமே என பல ஆபிரிக்க தலைவர்களால் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது.

✍ இதன் பிற்பாடு 1992 செப்ரெம்பர் 26ம் திகதி கிளார்க்கிற்கும், மண்டேலாவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது அரசிற் கெதிரான தாக்குதல்களை ANC முடிவுக்குக் கொண்டுவருவதாக மண்டேலா உறுதியளித்தார். மண்டேலாவின் இம் முடிவை கறுப்பின வலதுசாரி அமைப்புக்களான இங்காதா (Inkatha) வின் தலைவர் புத்தலேசியும் (Buthelezi), zulu அமைப்பின் தலைவர்களும் பலமாக கண்டித்திருந்தனர்.

✍ 1993 ஏப்ரலில் எதிர்கால தென்னாபிரிக்க சுதந்திர அரசை அமைப்பதற்கான அரசியல் சூழ்நிலையில் தென்னாபிரிக்காவின் அனைத்து அரசியல் அமைப்புக்களையும் அங்கீகரித்து செல்ல வேண்டுமென இருதரப்பினரும் இணக்கத்துக்கு வந்ததுடன், பரஸ்பரம் இருதரப்பும் இவ் அரசியல் மாற்றத்திற்கு தடையாக இருக்கும் வலதுசாரி அமைப்புக்களுடன் சந்தித்துப் பேசுவதென்றும் முடிவு காணப்பட்டது.

✍ 1993 யூலை 2ம் திகதி இங்காதா (Inkatha) உட்பட வெள்ளை, கறுப்பின வலதுசாரிகளின் பேச்சளவான உடன்பாட்டினை பெற்றுக் கொண்டதன் பேரில் 1994 ஏப்ரல் 27ம் திகதி சகல கட்சிகளும் பங்குபற்றக் கூடியதான ஜனநாயக பொதுத் தேர்தலுக்கான திகதியாகக் குறிக்கப்பட்டது.

✍ 1993 செப்ரெம்பர் 24ம் திகதி தென்னாபிரிக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீது விதிக்கப்பட்டுள்ள வர்த்தகத் தடைகளை நீக்குமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு நெல்சன் மண்டேலா வேண்டுகோள் விடுத்தார்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து அமெரிக்கா தென்னாபிரிக்கா மீது 1986ம் ஆண்டிலிருந்து கடைப்பிடித்து வந்த தனது கட்டுப்பாடுகளை தளர்த்துவதாக அறிவித்தது. 93 நவம்பர் 25ம் திகதி ஜனாதிபதி கிளிங்ரன் அதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். அதனைத் தொடர்ந்து சர்வதேச நாணயநிதியம் 850 மில்லியன் டொலர் கடனுதவி செய்ய முன்வந்துள்ளது. இந்தியாவும் இதுவரை கடைப்பிடித்து வந்த வர்த்தகக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதாக அறிவித்துள்ளது.

மட்டுமே கொண்ட சுயாட்சி நகரமாக இருக்கும்) ஆகியவற்றின் தலைவர்கள் இம் மாற்றங்களுக்கு எதிராக செயற்படுவதற்கான ஐக்கிய முன்னணியைக் கட்டியுள்ளனர்.

கிளார்க்கின் இச் சீர்திருத்த நடைமுறைகள் ஒருபுறம் நடைபெற்ற வண்ணமிருக்க, இக் குறிப்பிட்ட மூன்று வருட காலத்தில் 12,000 க்கு மேற்பட்ட மக்கள் இருதரப்பிலுமாக ஆயுதப்படையினராலும், ஆயுதம் தாங்கிய கறுப்பின, வெள்ளையின வலதுசாரிகளாலும், போராட்ட இயக்கங்களாலும் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 1993 இல் மட்டும் 4000 பேருக்கு மேல் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் பலர் இவ் அரசியல் மாற்றத்திற்காக உழைத்த அமைப்புக்களின் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் கடந்த ஏப்ரல் மாதம் 10ம் திகதி ஆபிரிக்க புதிய நாஜிகளால் படுகொலை செய்யப்பட்ட தென்னாபிரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் உயர் மட்ட தலைவர்களில் ஒருவருமான கிறிஸ் ஹானி (Chris Hani) யினது படுகொலை கறுப்பின மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.



அண்மையில் மண்டேலா வின் (முன்னாள்) மனைவி வினி மண்டேலாவின் காருக்கு துப்பாக்கிச் சூடு நடந்து மயிரிழையில் உயிர் தப்பியமை போன்ற நடவடிக்கைகள் தொடரவே செய்கின்றது. இரவு நேரங்களில் கறுப்பின மக்கள் செறிந்து வாழும் கிராமங்களில் புகுந்து நூற்றுக் கணக்கானோரை வயது பேதமற்று படுகொலை செய்வதும், அதற்குப் பதிலாக அப்பாவி வெள்ளை இனத்தவரை படுகொலை செய்வதுமாக மாறி மாறி பழிவாங்கல்கள் இடம் பெறுகின்றன. அரசின் ஆயுதப் படையும் கறுப்பின மக்களின் சிறு ஆர்ப்பாட்டங்களை அடக்குவதில் கடந்த கால அணுகுமுறையையே கடைப்பிடித்து வருகின்றமை இன்றைய மாற்றங்களை செயல் வடிவப்படுத்துவதில் உள்ள முரண்பாடான அம்சங்களாக உள்ளன.

மேற்குறிப்பிட்ட சாதகமான அம்சங்கள் தென்னாபிரிக்க அரசியலில் ஏற்பட்ட போதிலும் சிக்கல் நிறைந்த பாதகமான அம்சங்களும் கூடவே செயற்பட்டுவருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. வலதுசாரி கட்சிகளுடன் மண்டேலாவும், கிளார்க்கும் எவ்வளவோ விட்டுக்கொடுப்புக்கள் செய்து கொண்டபோதும், அவர்கள் இவ் ஜனநாயக வழிமுறைகளை முழுமையாக ஆதரிக்கத் தயாரற்ற நிலையே காணப்படுகிறது. பேச்சு வார்த்தையில் ஈடுபட்டவண்ணமே இங்காதா, ஆபிரிக்க மக்கள் அமைப்பு, Independant Alliance, Homeland (தென்னாபிரிக்காவிற்குள்ளேயே வெள்ளையர்களை

இவற்றை விட முக்கியமாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம் பெறவிருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தண்டனையும் வழங்கப்படுகிறது. வேலை நேரம் முடிந்த பின்பும் வேலை வாங்குவது, இடைவேளைகளின் போது வேலை செய்யுமாறு உத்தரவிடுவது, தொழிலாளர்களுக்கு உரித்தான லீவுகளை கொடுக்க மறுப்பது, உண்மையில் வேலைத் தளத்தில் கழித்த நாட்களைக்கூட விடுமுறையாக கணிப்பது, தொழிலாளர்களை உடுதுணியால் அடிப்பது, கையால் குத்துவது உட்பட சீர ரீதியான தண்டனைகள், பகிரங்க முறையில் மானபங்கப்படுத்துவது போன்ற மிகவும் கீழ்த்தரமான இழிவான செயல்களை பெண் மேற்பார்வையாளர்கள் செய்து வருகிறார்கள். பெண்கள் சுகயீனம் என்றாலும் சரி மாதவிடாய் காலங்களிலும் சரி ஏனைய நாட்களைப் போலவே வேலை செய்யும்படி இவர்களால் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அப்படி செய்யாதவர்களுக்கு தண்டனைதான். இதில் பந்தம் பிடிப்போர் தப்பித்துக்கொள்வார்கள்.

பெண்கள் மாதவிடாய்க்காலங்களில் கூடுதலாக உள, உடல் ரீதியாக சோர்வடைவர் என்பது உயிரியல் ரீதியான உண்மையாகும். ஒரு பெண்ணின் உடல், உள ரீதியான பிரச்சனைகளை ஒரு பெண்ணினால் அறிந்து கொள்வது சுலபம். ஆனால் இங்கோ பெண் மேற்பார்வையாளர்கள் இதைப் புரிந்து கொள்ளாதவர்களாகவே இரக்கமின்றி நடந்து கொள்கின்றனர், அதிக வேலை வாங்குகின்றனர். இத்தோடு மட்டும் இவர்கள் நின்றுவிடுவதில்லை. தொழிலாளர்களுடன் சீட்டுப் பிடிக்கின்றனர். அச் சீட்டுக்கு சேர மறுக்கும் தொழிலாளர்களை வேலை நேரங்களில் இம்சிப்பது இவர்களின் அன்றாட நடைமுறையாகி விட்டது. இதற்கிடையில் புதிதாக பதவியுயர்வு பெற்ற பெண் மேற்பார்வையாளர்களும் நிர்வாகத்தினரை சந்தோசப்படுத்துவதில் மிதமிஞ்சிய ஆர்வம் செலுத்துகின்றனர். இவர்கள் தொழிலாளராக இருக்கும் போது பட்ட அவஸ்தையை மறந்து விடுகின்றனர். நிர்வாகத்தினரை சந்தோசப்படுத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்புக் கொடுக்காத தொழிலாளர்களுக்கும் இவர்களுக்குமிடையில் பிளவு ஏற்பட்டு இருபகுதியினருக்கும் இடையே சச்சரவுகள், அடிபிடிகள் கிளம்புகின்றன.

இரவு நேரங்களில் தொழில் புரியும் இளம் பெண்களுக்கு பாதுகாப்பு என்ற பேச்சிற்கே இடம் இல்லை. இவர்கள் இரவு வேலை முடிந்து வீட்டிற்கோ, அல்லது அருகாமையிலுள்ள விடுதிகளுக்கோ செல்லும் போது திருடர்களால், காடையர்களால், பைத்தியக்காரர்களால், ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டும், பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டும், இன்னும் சிலர் கொலை செய்யப்பட்டும்கூட இருக்கிறார்கள். இதனால் பயபீதியடையும் பெண்கள் அங்கு வேலை செய்யும் ஆண் தொழிலாளர்களுடன் 'சினேகம்' வைத்துக் கொள்கின்றனர். அவர்களை தங்கள் 'காதலனாக்கிக்' கொள்வதில் முண்டியடிக்கின்றனர். இதன் மூலம் தங்களது பாதுகாப்பை உருவாக்கிக் கொள்வதிலும் ஓய்வு நேரத்தை காதல் களியாட்டங்களுடன் கழித்துக் கொள்வதிலும் இந்த 'காதலன' அவர்களுக்கு துணை புரிகின்றான். இக் காதலர்களில் ஒரு சிலரே திருமணம் செய்து கொள்கிறார்கள். இதனால் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் பெண்கள் 'நடத்தை கெட்டவர்கள்' என பெயர் சம்பாதித்துக் கொள்கின்றனர். இது அவர்களின் திருமண வாய்ப்புக்களை கடினமாக்கி விடுகிறது, இவர்களின் சமூக அந்தஸ்து பெண்கள் என்ற ரீதியில் மோசமாக பாதிப்படைகிறது.

இதற்கிடையில் சுதந்திர வர்த்தக வலயப் பிரதேசத்துள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள 'இசை மாலைப் பொழுது' என்னும் நிகழ்ச்சியில் அங்கு வேலை செய்யும் பெண்கள் –முக்கியமாக விடுதியில் வசிப்பவர்கள்– கூடுதலாக பங்கு பற்றுகிறார்கள். இது அனேகமாக வெளிநாடுகளில் நடாத்தப்படும் கிளப்புகள், டிஸ்கோக்கள் போன்றவையே. இவ் இசை மாலைப் பொழுதுக்கு 15–25 ரூபா வரையிலான கட்டணம் செலுத்தினால் தான் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். இங்கு சுமார் 5000–6000 பேர் வரை கூடுவர். வேலையில் களைப்புற்ற நிலையிலும் வசதியற்ற வாழ்வியல் மனநிலையாலும் பாதிக்கப்படும் நிலையிலும் இந் நிகழ்ச்சி பெண் தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து விடுகிறது.


காதலர்களற்ற, ஆண் துணையின்றி வந்த பெண்களை ஆயுதப்படையினரும், காடையரும் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தலும் நடக்கிறது. இதனால் இப் பெண்களில் சிலர் கருத்தரித்து தாயாகி விடுகிறார்கள். சிலர் கருத்தடை செய்து கொள்கிறார்கள். இவர்கள் கருத்தடை செய்வதற்கு அல்லது தாயாவதை தடுப்பதற்கு சுதந்திர வர்த்தக வலயத்தினுள்ளேயே பல ஆஸ்பத்திரிகளும், தகைமை பெறாத டாக்டர்களும் அவதாரம் பெற்றுள்ளனர். இதை அரசாங்கமோ அல்லது வேறு எந்த சமூக ஸ்தாபனங்களுமோ கண்டுகொள்வதில்லை.

இத் தொழிலாளர்களுக்கான ஜனநாயக உரிமைகள், குறிப்பாக வேலை நிறுத்தம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. 3000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் (90 வீதமானவர்கள் பெண்கள்) 27.4.93 அன்று எந்தவித காரணமும் அறிவிக்கப்படாமல் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அட்லஸ் கிலோவ் சிலோன் லிமிடெட் (Atlas Glove Ceylon Pvt Ltd in Srilanka) என்ற பெயருடன் இருக்கும் கம்பனியில் வேலை செய்த தொழிலாளர்களே நீக்கப்பட்டவர்களாவர். இவர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொடுக்கப்பட வேண்டிய புதுவருட முற்பணமான 900 ரூபாவில் 450 ரூபா மட்டுமே கொடுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் வேலைக்கு வர மறுத்துள்ளனர். இதுவே அவர்கள் வேலையிருந்து நீக்கப்பட்டதற்கான காரணமாகும்.

அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அடையாள அட்டையையும் பறித்தெடுத்துவிட்டார்கள். வேலை செய்ததற்கான சிபார்சுக் கடிதம் எதுவும் வழங்கப்படவும் இல்லை. இதனால் இவர்கள் வேறு இடங்களில் வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பொலிசார் இவர்களை கம்பனி வளவிற்குள்கூட அனுமதிக்கவில்லை என்பது அந்தத் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் எந்த நிலையில் வைத்துப் பேணப்படுகிறது என்பதற்கு ஒரு சாட்சியாகும்.

நாட்டின் மற்றைய தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தொழிலாளர்கள் (குறிப்பாக பெண் தொழிலாளர்கள்) அனுபவிக்கும் மோசமான வாழ்நிலை வசதிகள், ஜனநாயக உரிமைகள், சமூக அந்தஸ்து எல்லாமே சுதந்திர வர்த்தக வலயத்தின் அழுக்கடைந்த முகத்தைக் காட்டி நிற்கின்றன.

**–தீபா**

(குறிப்பு :– T.Hettiyarachi எழுதிய கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிட்டு வலயத்தின் உழைப்புப்படை முகங்கொடுக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சைனைகள் பற்றிய அறிக்கை மற்றும் Social Justice (June 93) என்பவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.)

♀♀♀♀♀♀♀♀♀♀♀♀♀♀♀♀

## சதைகளும் ......
## முண்டங்களுமாய் ......

*பெண்ணே நீ பிரசவி!*
*எலும்பு மச்சைகளாகவும்*
*சதைக் கட்டிகளாகவும்...*
*இரத்தம் தோய்ந்த*
*முண்டங்களை....யும்.....*

*இனி*
*இறந்து போகும்*
*மனிதனை குழந்தையாகப்*
*பிரசவிக்காதே!*

*மனிதனின் மூளைப்பசை*
*இரத்தம் ஊற்றிய*
*பிசுபிசுப்பான அந்தத்*
*திரவ விதி முறைகளற்ற..*
*குறைமாதமாய்*
*ஏதாவதைப் பிரசவி.*

*விளங்காத மூளையைக்*
*குழப்பி..*
*விறைக்கப்பண்ணுமுன்*
*மூளையே இல்லாத*
*முண்டங்கள் சிறந்தது.*

*முடியவில்லையானால் ....*

*அடக்கத்தோடு*
*அனைத்தும் முடிந்துவிடுவதான*
*பிரேதங்களைப் பிரசவி...*

*பெண்ணே!*
*நீ தூய்மையானவள்*
*இனி அப்படியொரு சங்கதியற்ற*
*மற்றொரு சந்ததி*
*தோன்ற முன்னர்*
*நீ பிரசவிக்கும்*
*வேலையை முடித்துவிட்டு*
*செத்துப்போ!*

*இன்னொரு யுகம்*
*வரட்டும்...*
*மனிதர்கள் எல்லாம்*
*புதிதாய் பிரசவிக்கப்படட்டும்*

*புதிதான கோட்பாடுகளால்*
*உலகம்*
*நிறைந்து போகட்டும்...*
*சில காலங்கள்*
*வரையாவது...*

*இரத்தம் காணாத...*
*கொலை தெரியாத...*
*மானிடங்கள்*
*வாழ்ந்துவிட்டுப்*
*போகட்டும்....*

**– இளைய அப்துல்லா**
**இலங்கை**
*(11.11.93)*






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரசேகரனுடன் ஒரு நேர்காணல்

***? இ.தொ. காவிலிருந்து வெளியேறி மலையக மக்கள் முன்னணியை ஆரம்பித்துள்ளீர்கள். மலையக மக்கள் முன்னணியின் கொள்கைகள் இ.தொ. காவின் கொள்கைகளிருந்து எந்தளவிற்கு வேறுபடுகிறது. மலையக மக்கள் முன்னணியின் வரலாற்றுத் தேவை எந்தளவுக்கு அவசியமானது?***



**0** தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளை சுலபமாக கறப்பதற்கு இன உணர்வுகளை கிளறி விடும் தந்திரத்தில் தான் அனைத்து பெரும்பான்மை அரசியல் வாதிகளும் ஏகோபித்து போட்டி போடுகிறார்கள். எவராவது சிறுபான்மையினரின் — உரிமைக்காகக் கூட அல்ல– அவர்களின் ஆகக் குறைந்த தேவைக்காக வாய் திறந்தால் கூட எச்சரிக்கையடைந்து விடுகிறார்கள். "இது தகுமா? இப்படியெல்லாம் சிறுபான்மையினர் கேட்கலாமா....." என்று தமது மக்களிடம் நியாயம் கேட்க ஆரம்பிக்கிறார்கள்.

பத்தாண்டுக்கு மேலான உள்நாட்டு யுத்தத்தை இழுத்து விட்டிருக்கின்ற வட, கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சனையே "பயங்கரவாதம் மட்டும்தான்" என்று கூறி உதாசீனப்படுத்துகின்ற அசட்டைத்தனம் இந்த இனவாதத்தின் பிரசவமேயாகும். நீண்ட வரலாற்று பிரபலத்தைக் கொண்ட இனப் போராட்டமே இந்தக் கதியாகும் போது மலையக மக்களின் பிரச்சனைகளோ இன்னும் உருப்படியாக வெளிச்சத்துக்கே கொண்டு வரப்படாமல் இருக்கின்றது. எனவே இவர்களின் கோரிக்கைகளின் நியாயங்களுக்கு அங்கீகாரத்தை உருவாக்குவதற்காக பாடுபடுவதில் உள்ள கடுமையை உணர முடியும்.

இ.தொகா. சில தற்காலிக உடன்பாடுகளின் மூலம் பிரச்சினைகளை தள்ளிப் போடுகின்ற செயலை தான், தப்புவதற்கான அல்லது சமாளிப்பதற்கான உத்தியாக நம்பிக் கொண்டிருக்கிறது.

பிரஜாவுரிமை இல்லாதவர்களுக்கு சத்தியக் கடதாசியை கொடுத்து வாக்காளர்களாக பதிந்து கொள்ளும் அரசுடனான சமரச ஏற்பாட்டை "இது பிரஜாவுரிமை பிரச்சனைக்கு தீர்வாகாது" என அப்போதே நாம் குறை சொன்னோம். இப்போது அந்த நடைமுறை அரசினால் அலட்சியம் செய்யப்பட்டு விட்டதால் "ஆட்சியாளர்களின் போக்கு அதிருப்தியளிக்கிறது" என இ.தொகா. அறிக்கை விடுவதன் மூலம் அவமானத்தை துடைத்துக் கொள்ள முயற்சிக்கிறது.

தோட்டப் பகுதிகளுக்கு கிராம சேவகர்கள் நியமிப்பது பற்றி ஜனாதிபதியுடன் பேசும்போது "ஒரு கோப்பை சோறு போட்டால் இரண்டு கோப்பை கேட்பதாக" ஜனாதிபதி தெரிவித்ததாக கூறிய திரு தொண்டமான் "நான் ஒரு கோப்பை அல்ல, அரைக் கோப்பை தான் கேட்கிறேன்" என பேசியிருக்கின்றார். (வீரகேசரி –01.02.94) ஒரு இனத்தின் உரிமையை இப்படி கையேந்தி யாசிப்பதுதான் இ.தொகாவின் ராஜதந்திரம். இதுதான் அவர்கள் பாஷையில் "தீர்க்கதரிசனம்".

எமக்குரிய உரிமைகள் இன்னொருவரிடம் இருப்பதே திருட்டுத்தனமும் மோசடியுமாகும். இதனை தர மறுப்பதற்கு எவருக்கும் தகுதியோ அதிகாரமோ கிடையாது. இதை திருப்பி தருவதற்கு இளகிய மனமல்ல, கபடத்தனமற்ற அரசியல் நேர்மையும், மனிதாபிமான பண்பும்தான் வேண்டும். இதைச் சுட்டிக் காட்டுவதே எமது அரசியல் வழிமுறையாகும்.

மலையக மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை அச்சொட்டாக பட்டியலிட்டு பகிரங்கப்படுத்தவோ, அக் கோரிக்கைகளின் நிரந்தர தீர்வுகளுக்கு உறுதியான வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்கவோ இ.தொகா தயாரில்லை.

மற்ற மலையக தொழிற் சங்க அமைப்புகளுக்கோ இதிலெல்லாம் அக்கறையே இல்லை. இது தொடர்பாக கருத்து தெரிவிப்பதற்குக் கூட ஆர்வமோ தைரியமோ இருப்பதில்லை.

இந்த நிலை நீடித்தால் மலையக மக்கள் எஞ்சி இருக்கின்ற அற்ப சலுகைகளைக் கூட ஒவ்வொன்றாய் இழந்து விட்டு நாடோடிகளாய் மாறிவிடக் கூடிய அபாயம் தவிர்க்க முடியாததாகும்.

இ.தொகா. அரசுடன் கூடிக் குலாவிய கடந்த 16 வருட காலமும் அர்த்தமில்லாத காலங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அரசு–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தொகா. உறவால் சில தனி நபர்கள் பல லாபங்களை அடைந்திருக்கலாம். அதே போல் மலையகத்தில் சிலருக்கு அரசியல் பதவிகள் வந்து கிடைத்திருக்கலாம். ஆனால் மலையக சமூகத்துக்கு எந்த அரசியல் உரிமையையும் பெற்றுக் கொடுத்து விட்டதாக இ.தொகா. மார்தட்ட முடியாது. ஆனால் எதுவித அடிப்படையுமில்லாமல் அர்த்தமற்ற நம்பிக்கையையும் பேதமையான எதிர்பார்ப்பையும் மட்டுமே மக்களிடம் இ.தொகா வால் ஏற்படுத்த முடிந்துள்ளது. இந்த ஏகாந்த கனவுகளிலேயே மக்கள் மயங்கிப் போய் இருக்கிறார்கள்.

இத்தகைய நிகழ்வுகளுக்கு மத்தியில் தான் "மலையக மக்கள் முன்னணி" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் பிரக்ஞையற்று ஸ்தம்பித்துப் போயுள்ள மலையகத்தில் முனைப்பான செயற்பாட்டின் அவசியத்தை உணர்கின்றோம்.

இலங்கை சிறுபான்மையினரின் பிரச்சனையில் வட, கிழக்கு மக்களின் பிரச்சனையின் முக்கியத்துவத்துக்கு சற்றும் குறைந்ததல்ல மலையக மக்களின் கோரிக்கைகள் என்பதை உணர வைப்பதே எமது அரசியல் கடமை என கருதுகின்றோம்.

***? மலையக மக்களுக்கான அரசியல்தீர்வை தங்கள் அமைப்பு தெளிவாக முன்வைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் தற்போது சிலரால் முன்வைக்கப்படுகிறது. அது பற்றி தங்களுடைய அபிப்பிராயம் என்ன?***

**0** இந்த உண்மையை வருத்தத்தோடு ஏற்றுக் கொள்கிறேன். இதற்கு பிரதான காரணம் எமது ஸ்தாபனத்தை ஆரம்பித்த ஒரு வருடத்திலேயே நாம் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக தடுப்பு காவலில் இருந்து கொண்டிருக்கின்றோம். இதனால் எமது திட்டங்களும் செயற்பாடுகளும் தேக்க நிலையை அடைந்திருப்பது ஜீரணிக்க முடியாத உண்மைதான். அதே நேரம் எமது அரசியல் தீர்வை தேசிய ரீதியில் முன் வைப்பதற்கு முன்மலையக மக்களிடம் அதற்கான ஆதரவை திரட்டிக் கொள்வதற்கான பிரச்சாரம் தான் மிக அவசியமெனக் கருதுகின்றோம். மக்களுக்கு எமது கோரிக்கைகளின் நியாயம் பூரணமாக தெளிவுபடுத்தப்பட்டால் தான் எமது கருத்துகளுக்கு விகற்பமான விளக்கங்களை கூறும் குறுகிய கண்ணோட்டமுள்ள அரசியல்வாதிகளின் தர்க்கங்களை முறியடிப்பதற்கு மக்கள் தயாராவார்கள்.

இதற்கான வேலைகள் —எமக்கேற்பட்டுள்ள நெருக்கடியான சூழல்களினால்— மெதுவாக ஆனால் ஆழமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

***? மலையக மக்களுக்கு என தனியான மாகாணசபை அமைக்கப்பட வேண்டும் என தங்கள் அமைப்பு கூறுகின்றது. அம் மலையக மாகாணத்துக்கான எல்லைகள் யாவை. ? அவ் எல்லைகளுக்குள் இருக்கும் சிங்கள மக்களின் நிலையாது?***

**0** மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் மலையகத் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த மாகாணம் அமைகிறது. ஆனால் எல்லைகளில் நிர்ணயம் இன்னும் எம்மால் பூரணப்படுத்தப்படவில்லை. இதன் புவியியல் அமைப்பு, இன விகிதாசாரம், தற்போதய நிர்வாக பிரிவுகளின் தன்மை, மலையக மக்களை ஒன்றிணைப்பதற்கான சாதகத் தன்மை, நடைமுறைச் சாத்தியத்திற்கான ஏதுக்கள் என்பவற்றை சகலருக்கும் ஏற்புடைய விதத்தில் நியாயப்படுத்தக் கூடியதாய் இதன் எல்லைகளைப் பற்றிய ஆய்வின் பூர்வாங்க நகலை கவனமாக தயாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

நாம் கோருவது தனித் தமிழ் மாகாணம் அல்ல, மலையகத் தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணம் தான். ஏனைய பகுதிகளில் சிதறிவாழும் தமிழர்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என நாம் எதிர்பார்ப்பதைப் போல இம் மாககணத்தில் வாழும் சிங்கள மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் தனித்துவத்தையும் கௌரவிக்க வேண்டும் என்ற கருத்திலும் நாம் உறுதியோடிருக்கிறோம்.

***? அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை நிர்வாக முறை வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல தெற்கிலேயும் தோல்வியையே தழுவியுள்ளது என ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. இந் நிலையில் மலையக மக்களுக்கு அதனை ஒரு தீர்வாக முன்வைப்பதன் மூலம் என்ன பயனை அடையப் போகிறீர்கள்?***

**0** மகாணசபையால் எதை சாதிக்கப்போகிறோம் என்பதல்ல இப்போதய கேள்வி. நமக்கு பயன் தராது என்பதால் மலையக மக்கள் ஒதுங்கியிருக்கப் போவதில்லை. எப்படியோ இந்த நிர்வாகத்துக்குள் தான் எமது மக்களும் உள்ளடங்கப் போகிறார்கள்.

எனவே "இதில் எமது மக்களின் செல்வாக்கு என்ன' என்பதும் அசட்டை செய்யக் கூடாத கேள்வியாகும். மாகாண சபையினால் சகல உரிமைகளையும் பெற்றுவிட முடியுமென நாம் கூறவில்லை. ஆனால் மலையக மக்களுக்கென்று சுதந்திரமான நிம்மதியான பிரதேசமொன்றை பாதுகாத்துக் கொள்ளவும், மக்களுக்கு எதிர்காலத்தின் மீது புதுப் பிடிப்பை ஏற்படுத்தி அரசியல் விழிப்புணர்வை துரிதப்படுத்தவும் இது அவசியம் என்றே கருதுகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்று மடியும் எங்கள் ......

யாராவது ஒருவர் பொதுவாக பலர் சரியென்று நம்பிக்கொண்டிருக்கின்ற கருதுகோள்களுக்கு எதிராக உண்மையை வலியுறுத்திக் கதைத்தால் அவரைப் பார்த்து மற்றவர்கள் கேட்பார்கள் நீர் பெரிய அரிச்சந்திரன் என்ற நினைப்போ! அல்லது அரிச்சந்திரன் வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரரோ என்று. இந்த வழியில் எங்கட ஆட்களின்ர சங்கதிகளில்லை தலையை குடுத்து அரிச்சந்திரப்பட்டம் வாங்காவிட்டால் எனக்கு மண்டையே வெடிச்சுடும்போல இருக்கும். இப்படி மண்டைக்குள் குடைபிற விசயங்களில ஒன்றுதான் அம்மிப்பிரச்சனை. அரிச்சந்திரனுக்கும், அம்மிக்கும் என்ன உறவு என்று இதென்ன மொட்டத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுற வேலை என்று யோசிக்கிறியளோ! திரைகடல் ஓடி திரவியம் ஈட்ட வந்த எம்மவர்களில் சிலர் அம்மியை வைத்து திரவியம் தேடுகிறார்கள் என்றால் யோசியுங்கோவன்.

நண்பர் ஒருவரின் திருமணம் முடிந்து 3 ம் நாள், கலியாண வீட்டுக்கும் போகவில்லை வீட்டை வந்து காட் தந்தவர், சுவிசுக்கு வந்த புதுசில் அரிச்சந்திரனுக்கு முதல் சோறு போட்டவர், போய் ஒருக்கால் வாழ்த்திவிட்டு வராட்டால் கடைசியாக மாத்தையாவிற்கு கிடைச்ச அவப்பெயர் நண்பர்றை வாயால எனக்கும் கிடைக்கும். வேறு ஒரு நண்பனும் என்னட்டை பின்னேரம் சாப்பிட வாறன் என்று சொன்னதில் சமையல் பிரச்சனை வேறு கிடக்கு. இப்படியான கட்டங்களை சமயோசிதப் புத்தியை பாவிச்சு Two in one ஆக திட்டம் போட்டு நண்பரின் காரில் திருமணம் முடித்தவர் வீட்டைபோய் சம்பிரதாயத்திற்கு வாழ்த்தும் தெரிவித்து ஒரு பொக்கேயும் குடுத்துவிட்டு அளவளாவினோம். நண்பர் எச்சில் கையால காகம் விரட்டுகிறவர் இல்லை. சாப்பாடு அந்த மாதிரித்தான். பிறகென்ன வந்த விசயம் முடிந்த திருப்தியாய் நண்பனைப் பார்த்து விடைபெறுகிறோம் என்றேன், அப்போதுதான் நண்பர் குண்டு ஒன்றைத் தூக்கி, இல்லை அம்மியை எங்கள் தலையில் கட்டினார்.

திருமணத்திற்கு அம்மி தேவைப்பட்டதாம், அதனால் அம்மியை ஒருவரிடம் 100 Fr வாடகைக்கு எடுத்தவராம். அந்த அம்மி மறுநாள் வேறு ஒரு கலியாணவீட்டுக்கு வாடகைக்கு போகுதாம். அம்மியை உரியவரிடம் உடன் ஒப்படைக்காவிடில் மற்றய கலியாண வீட்டிற்கு வாடகைக்கு விடுற காசையும் தர வேணும் என்று அம்மிக்காரர் ஓரேயடியாக கூறிவிட்டாராம். அதாலை அந்த அம்மியை நண்பனின் காரில் கொண்டு போய் 120 Km இற்கு அங்காலையுள்ள அம்மிக்காரரிட்டை ஒப்படைக்க கூறி அன்பான வேண்டுகோள் ஒன்ற விடுத்தார். திருமணமான நண்பர் அந்த அம்மியை தபாலில் பார்சல் செய்து அனுப்புவதற்கு கூட முயற்சித்தவராம், அம்மிக்காரர் கூறிவிட்டாராம் அம்மி தொலைஞ்சுதோ, உடைஞ்சுதோ உங்கட பொறுப்பு என்று. என்றால் பாருங்கள் அந்த அம்மியின் மவுசை. கல்யாண வீட்டுத்தேவைக்கு என்று முதல்நாள் அந்த அம்மியை நண்பர் என்னைப் போல் இளிச்சவாயர் ஒருவர் மூலம் காரில் எடுத்தர செய்த விபரத்தையும் கூறினார். எனக்கு தலைசுற்றிச்சு ஆக அந்த அம்மிக்கு பெற்றோல் காசையும் கணக்குப் பார்த்தால் 130 Fr என்றாலும் செலவழிக்கப்பட்டிருக்கும். இலங்கைகாசிற்கு 3900ரூபா. ஒரு அரைமணிநேர தேவைக்கு இந்த அம்மியை எடுத்துவர ஒரு ஆள் காரில் 1 மணிநேரம் பிரயாணம் செய்து கொண்டு போக மீண்டும் ஒருமணிநேர பிரயாணம்.

எனக்கு எப்பவுமே ஒரு ராசி நான் எங்க போனாலும் சனியன் எனக்கு முன்னாலை போய்விடும் இண்டைக்கு இந்த அம்மி ரூபத்தில சனியனை கண்டனான். அம்மிக்காரனின் விலாசத்தை வாங்கிக் கொண்டு காரில் அம்மியையும் போட்டுக்கொண்டு புறப்பட்டோம். என்ன செய்வது உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று அம்மா என் ரத்தத்தோடு ஊட்டி வளர்த்தவ. இல்லாட்டா நண்பனை எப்படியும் காய் வெட்டியிருக்கலாம். அம்மியை கொண்டுபோய் விலாசம் தேடி கஸ்டப்பட்டு நான் அந்த அம்மிக்கார தொழிலதிபரின் வீட்டில் ஒப்படைத்துவிட்டு அவரையும் என் இரு கண்களாலையும் கண்ட தவப்பயனால் உள்ளம் பூரிப்படைந்து திரும்பி வரும்வழியில் காரை வேறு திசையில் செலுத்தி இன்னும் அதிக அலைச்சலுடன் வீடு சென்று மறுநாள் வேலைத்தளத்தில் என்னுடன் வேலை செய்யும் நண்பர்களுக்கு அம்மி காவிய பெருமையை கூறினேன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த இன்னொருவர் கூறினார் இதென்ன பெரிய விசயம் இதைவிட தனது நண்பர் ஒருவர் கருங்கல்லில் நினைவுச்சின்னம், பூங்காவில் நீர் பாயும் தொட்டிகள், இருக்கைகள் செய்யும் தொழிற்சாலை ஒன்றில் அம்மியின் டிசைனை கொடுத்து இங்கேயே நல்ல அம்மி ஒன்றை செய்ததாகவும், அதை இப்போது வாடகைக்குவிட்டு நல்ல வருமானம் ஈட்டுவதாகவும், வெளி மாநிலங்களிலுள்ள தனது உறவினர்களுக்கு அம்மி செய்து கொடுத்து சைட் பிசினஸ்ஸில் ஊக்குவித்து வருவதாகவும், நல்ல அம்மி சப்ளைக்கு ஏனைய ஐரோப்பிய நாடுகளிலுள்ள அவரின் உறவினர்களையும் நம்பிக்கையுடன் இத்தொழிலில் இறங்குமாறு ஆர்வமூட்டி வருவதாகவும் கூறினார்.

மேலும் அம்மி பற்றி சுவையான தகவல்கள் எனக்கு கிடைத்தன. ஆரம்ப காலங்களில் சுவிசில் சாதாரண

↗39



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூரிய சாம்ராஜ்யம் (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## கூட்டுக் கொள்ளைக்காரர்கள்:-

உள்நாட்டு ஆளும் வர்க்கத்துடன் ஜப்பான் கூட்டு வைத்துக் கொண்டிருந்தாலும் இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் ஜப்பான் இந் நாடுகளில் தனது முதலீடுகளுக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கிக் கொள்கிறது. இந் நாடுகளின் வியாபார முதலீட்டு நிதி சம்பந்தமான கொள்கைகளில், தங்கள் பொருளாதார நலன்களிற்கு அதிகபட்ச வசதியையும் உத்தரவாதத்தையும் அளிக்கும் வகைகளில், மாற்றங்களைக் கொண்டு வரக்கூடிய அளவு இவர்களின் செல்வாக்கு ஓங்கியுள்ளது.




ஜப்பானிய முதலீடுகளும், இதன் கடல் கடந்த அபிவிருத்தி உதவியும் (ODA) ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. 60-70 வீதமான கடல் கடந்த அபிவிருத்தி ஆசியாவைச் சென்றடைகிறது. இந்த கடல் கடந்த அபிவிருத்தி உதவி ஆசிய நாடுகளில் பொருளாதார அமைப்புக்களைச் செப்பனிட்டுச் செழுமைப்படுத்துகின்றன. ஏனெனில் பொருளாதார வலைப்பின்னல் எவ்வளவு முன்னேறுகிறதோ அந்த அளவிற்கு ஜப்பான் தனது சுரண்டலையும் விரிவுபடுத்தலையும் கூட்டிக்கொள்ளக் கூடியதாகவிருக்கிறது. ODA ஜப்பானின் சுரண்டலுக்கும் விரிவுபடுத்தலுக்குமே தொழிற்படும் அமைப்பேயன்றி - அவர்கள் கூறுவதுபோல் - ஆசிய நாடுகளில் அபிவிருத்திக்குக் கைகொடுக்கும் நிறுவனமல்ல.

வீதிகள், பாலங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், தொலைத்தொடர்பு அமைப்புகள் போன்ற திட்டங்களை நிர்மாணிப்பதிலேயே ODA முக்கியமான பங்கை ஆற்றுகின்றது. இந்த 'உதவி' திட்டங்கள் உண்மையில் ஜப்பானிய பெரும் நிறுவனங்களுக்கு - அதன் 'நிபுணத்துவத்திற்கு' - மறைமுகமாக சேவையாற்றுவதாகவே இருக்கிறது.

ODA உதவி பெறும் நாடுகளில் அந் நாட்டின் அபிவிருத்தி தேவைகளை கணக்கிலெடுத்து தொழில் மயப்படுத்தும் வேலையைச் செய்வதில்லை. மாறாக ஜப்பானிய தொழில் நுட்பத்தை மையப்படுத்தி தம்மீது (ஜப்பானின்மீது) தங்கியிருக்கும் தொழில் மயப்படுத்தல்களையே செய்து கொண்டிருக்கிறது. இந் நடவடிக்கைகள் இயற்கையின் மீதான குறுக்கீடுகளையும், கிராமங்கள் மற்றும் சமூகக் கட்டுமானங்களை முற்றும் முழுவதுமாகக் குலைந்து போகச் செய்யுமளவிற்கு மோசமானதாக மாறியுள்ளது.

உதாரணமாக பிலிப்பைன்ஸில் கலபார்சோன் வேலைத்திட்டம் JICA (ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு ஏஜன்சி) யால் மேற்கொள்ளப்பட்டது. முடிவு 100,000 விவசாயக் கூலிகளும் மீனவர்களும் தங்களது குடிநிலங்களை இழந்து வேறுபகுதிகளை நாடிச்செல்ல வேண்டியதாயிற்று. உலகவங்கியும் OECF (ஜப்பானிய பொருளாதாரநிதியம்) உம் கூட்டாக நர்மதா திட்டத்தை மேற்கொண்டுள்ளன. இத் திட்டம் நிறைவேறினால் ஒரு மில்லியன் மக்கள் தங்கள் பாரம்பரிய நிலங்களை விட்டு தூக்கிவீசப்படுவார்கள்.

ODA இன்னுமொரு 'சேவையையும்' செய்கிறது. சர்வதேச ரீதியாகத் தடைசெய்யப்பட்ட நச்சுக் கழிவுப் பொருட்கள், நச்சுக் கழிவுகளைக் கக்கும் தொழிற்சாலைகள் என்பவற்றை மற்றைய ஆசிய நாடுகளுக்கு நகர்த்துகிறது. மிற்சுபிசி ரொக்சிக் (mitsubishi toxic) கழிவுகளை மலேசியாவில் கொண்டுபோய்க் கொட்டியது. மலேசியா, இந்தோனேசியா நாடுகளிலிருந்து (இயற்கை வளங்களை) காடுகளை அழித்து மரங்களை கடத்திச் சென்றதின் மூலம் இயற்கைச் சமநிலையில் பாதிப்பேற்பட்டு சுற்றாடல் பாதிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இருக்கும் பல இன்னல்களுடன் இதையும் சேர்த்துக் கொண்டு ஆசிய மக்கள் வாழவேண்டியுள்ளது.

## புதிய ஆசிய ஒழுங்கு (New Asian Order)

அமெரிக்கா, ஐரோப்பிய சமூகம் என்பவற்றுடனான வளர்ந்துவரும் முதலாளித்துவப் உள் போட்டியில் ஜப்பான் வருங்காலத்தை கணக்கிலெடுத்து தனது ஏகாதிபத்திய திட்டங்களை மறுபரிசீலனை செய்யவும் மறுசீரமைக்கவும் வேண்டிய நெருக்குவாரத்திற்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

தங்கள் தங்கள் சந்தைகளைப் பாதுகாக்கும் போக்கு மேலோங்கும் இக் காலகட்டத்தில் ஜேர்மனியும் பிரான்சும் தலைமை தாங்கும் ஐரோப்பிய சமூகம் (EC), அமெரிக்காவின் தலைமையிலான NAFTA (வட அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயக் கூட்டு) என்பன தங்கள் சந்தைகளைப் பாதுகாக்கவும் தக்கவைத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

19 ←

பங்களிப்பையும் ஒரு கூட்டு முயற்சிகளின் ஊடாகப் பிரதிபலிக்கிறது என்றால் மிகையாகாது. நாட்டின் பல கலைஞர்கள் இன்று புலிகளுக்காக உழைக்கிறார்கள் என்பது உண்மையே! இவர்கள் புலிகளின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டுத்தான் கலைப் படைப்புகளை உருவாக்கிறார்களோ.....இல்லையோ....

இன்றைய தாய்மண்ணில் கலைஞர்கள் தமது கலைத்திறனை வெளிப்படுத்துவதற்கான ஒரேயொரு களமாக புலிகள் இருப்பதனால் அவர்களது கலை வெளிப்பாடுகளும் புலிகளை மையப்படுத்தியதாகவே உள்ளது. இதனை மீறி தமது கலைத்திறனை வெளிக்கொணரும் ஆற்றல் உள்ளவர்கள் வெளியேறுகிறார்கள், சிலர் மௌனித்துவிடுகிறார்கள். இன்னும் சிலருக்கு மௌனிக்கும் உரிமையும் அற்று புலிகளுக்காகவே கலைகளைப் படைக்கும் நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள். வேறு சில கலைஞர்கள் தமது கலைத்திறனை வெளிக்கொணர வேண்டும் என்ற அவர்களது ஆத்மார்த்த திருப்திக்காக புலிகளின் இக் களத்தில் தம்மையும் இணைத்துக் கொள்கிறார்கள்.

தாய்மண்ணின் இக் கலைப் படைப்புக்கள், 1966–69 சாதியப் போராட்டத்தைத் தொடர்ந்து, 1978 இல் யாழ் நாடக அரங்கக் கல்லூரியின் சேவையுடன், பாலேந்திரா, தாசீயஸ் போன்றோரின் திறமை வெளிப்பாடுகள் தீவிரமடைந்ததனாலும், இவற்றுடன் மௌனகுரு போன்றோரின் திறமைகள் துணை நின்றதனாலும் மேம்பாட்டை அடைவதற்கான சாத்தியப்பாட்டைக் கொண்டிருந்தது. பின்பு எண்பதுகளின் நடுப்பகுதியில் "மண் சுமந்த மேனியர்" போன்ற நாடகங்களின் வருகையுடன் ஈழத்துக் கலை வளர்ச்சி குறிப்பாக நாடகத்துறை குன்றாத வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது. இத்தகைய கலைஞர்கள் பலரின் உழைப்புக்கள் இன்று விடுதலைப் புலிகளுக்கே சேவையாற்றுகின்ற துர்ப்பாக்கிய நிலை.

ஒளிவீச்சு வீடியோ இதழின் பிரச்சார நுணுக்கம் பற்றி நோக்குவோமாயின்..........

*1991* இன் ஆரம்ப காலம். ஜனவரி, பெப்ரவரி மாதங்கள்... ஈராக்–குவைத் வான் பரப்பில் பறந்துகொண்டிருந்த குண்டு வீச்சு விமானங்கள், அதன் முனையில் பொருத்தப்பட்டிருந்த இலத்திரோன் கருவிகள், தாக்குதல் நிகழ்த்த வேண்டிய இடத்தைச் சரியாக கணிப்பிட்டு அந்த இடத்திலேயே குண்டைப் போடும் "திறமை" மிக்க விமானிகள்......... என்று கூட்டுப் படைகளின் போர்த்திறனை வெளிப்படுத்தி அமெரிக்காவின் ஓர் இராணுவத் திரைப்படத்தைக் காட்டுவது போல் நிமிடத்திற்கு ஒருமுறை காட்சிப்படுத்தியது CNN தொலைக்காட்சி நிறுவனம். தமது செய்தி நிறுவனம் பொதுவானது என்ற தோற்றத்தைக் கொடுப்பதற்காக ஈராக் யுத்தத்திற்கு எதிரான ஒரு சில ஊர்வலங்களை மட்டும் இடையிடையே காட்டிவிட்டு கூட்டுப் படைகளின் இராணுவத் தாக்குதல்களை நாள் முழுவதுமாகக் காட்சிப்படுத்திக் கொண்டிருந்தது. யுத்தத்தினால் உயிரிழந்த இலட்சக்கணக்கான மக்களையோ, மக்களின் அவலங்களையோ, அமெரிக்காவுக்கு எதிரான ஈராக் மக்களின் மனோநிலைகளையோ இதுவரை CNN வெளிப்படுத்தியது கிடையாது. இன்னும், தமது நிலைப்பாட்டுக்கு ஏற்ற வகையில் சிறிய விசயங்களைப் பெரிதுபடுத்துவதும், பெரிய விசயங்களை சிறிதுபடுத்துவதும், அல்லது மறைத்து விடுவதும் மேற்குலகச் செய்தி நிறுவனங்களுடன் ஒட்டிப் பிறந்த குணாம்சம். இதற்கு நவீன விஞ்ஞானக் கருவிகளை தொழில் நுணுக்கத்துடன் பயன்படுத்துவது இதன் பிரதான தொழிற்பாடு.

இத்தகைய குறைபட்ட, ஒருபக்கச் சார்பான, மனித தர்மத்திற்கு மாறாக மக்களை மூளைச்சலவை செய்கின்ற ஒருவகை -Journalism- உத்தி அல்லது Media முறைமைதான் (விடுதலைப் புலிகளின் ஏனைய பிரச்சாரங்களைப்போல்) "ஒளிவீச்சு" நாடாவையும் ஆளுமை செய்கிறது.

பிரேமதாசாவின் படுகொலை, ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் போன்ற சில பொதுச் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் பதிவு செய்திருக்கும் இவ் வீடியோ நாடாவில், தாய்மண்ணின் மறுபகுதி முழுமையாக மறைக்கப் பட்டிருக்கிறது.

யூன் மாத விவரணம் பகுதியில் தமது வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்து மடு அகதி முகாம்களில் வாழும் தமிழர்களையும், அவர்களின் இன்றைய சொத்துக்களாக மலிந்துபோன துன்ப துயரங்களையும், எதிர்காலம் அற்ற வாழ்வியலையும், போதிய உணவின்மை, தண்ணீரின்மை, சுகாதாரமின்மை போன்ற வாழ்வியல் கஷ்டங்களையும் துல்லியமாகவே படம்பிடித்திருக்கும் ஒளிவீச்சு வீடியோ கமறாக்கள்.....

தமது சொந்த நில புலங்களில் இருந்து புலம் பெயர்க்கப்பட்டு, புத்தளத்திலும், வேறு சில இடங்களிலும் அகதிமுகாம்களில் அடைபட்டு, துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்ற முஸ்லிம் மக்களின் வாழ்வியல் கஷ்டங்களை (இத் துன்ப நிகழ்வின் மூன்றாவது ஆண்டை முன்னிட்டு ஆயினும்) ஒரு பொதுச் செய்தியாகவேனும் பதிவு செய்து கொள்ளுமா? இல்லை! ஏன் என்றால் இம் மக்களை விரட்டி அடித்து புலம் பெயர்த்தவர்களே இவர்கள் தான்!

*1991* ஆனையிறவு சமரில் வீரச்சாவு எய்திய ஐநூறுக்கும் மேற்பட்ட மாவீரர் நினைவாக அவர்களது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவப்படங்களுடன் கூடிய நினைவாலயம் கொடிகாமத்தில் திறக்கப் பட்டமையும், அவர்களது நினைவாக பெற்றோர் தத்தமது பிள்ளைகளின் உருவப்படத்திற்கு மலர் வைத்து கதறி அழுகின்ற காட்சிகளும், இதேபோன்று புலி வீரர்களின் இறப்பை தாங்காது (பள்ளிக்கூடச் சிறுவர், சிறுமிகள் உட்பட) கிராம மக்களும் பெற்றோரும் துயருறுவதும் ஒளிவீச்சு சஞ்சிகையின் சில பகுதிகளை நிரப்பும் நெஞ்சத்தை அழுத்தும் நிகழ்வுதாம்.

மாற்றுக் கருத்துடையவர்கள் என்ற காரணத்துக்காக மட்டும் புலிகளினால் கைது செய்யப்பட்டு காணாமல் போன இளைஞர்களின் (அவர்களின் இறந்த நாள் எது என்று கூடத் தெரியாமல் தவிக்கும்) பெற்றோரினதும் உறவினர்களினதும் –அவர்களுக்காக வாய்திறக்கும் உரிமைகூட அற்ற நிலையில்– உள்ளங்களில் உறைந்துபோன துன்ப துயரங்களையும் கண்ணீர்த் துளிகளையும் ஒளிவீச்சு கமராக்குள் அடக்கி விடுவது நியாயமில்லைத்தான். ஏனெனில் அந்த உடல்களின் உயிர்களை துடிக்கத் துடிக்க குடித்தவர்களே அவர்கள்தான்!

யூன் மாத செய்திச் சரத்தில் சிறப்பிடம் பெறுவது புலிகளிடம் கைதிகளாக உள்ள 41 சிங்களப் பொலிஸாரின் ஸ்ரீலங்கா அரசுக்கெதிரான சாகும்வரை உண்ணாவிரதமும், அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிட அனுமதிப்பதும், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளும், உடன்பாடுகளும், ஐவர் உடனடியாக விடுவிக்கப் படுதல், பொருளாதாரத் தடையை நீக்குதல், ஒப்பந்தத்தை அரசு நடைமுறைப் படுத்தாமை போன்ற நிகழ்வுகளை பதிவு செய்து கொண்ட ஒளிவீச்சு நாடாக்கள்.......

சர்வதேசரீதியான அழுத்தங்களுக்கு மத்தியிலும் பெண்ணிலைவாதியும் கவிஞருமான செல்வியும், கேசவனும், அவர்போன்ற நூற்றுக் கணக்கான ஜனநாயக சக்திகளும், இன்னும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் புலிகளின் சிறைகளில் (வதைமுகாம்களில்) அனுபவித்து வரும் சித்திரவதைகளையும், துன்ப துயரங்களையும், அவர்களின் உறவினர் சென்று பார்வையிடுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையும், இவர்களில் சிலர் கொலை செய்யப்பட்ட செய்திகளையும் வெளிப்படுத்துமா? தாய்மண்ணின் புதல்வர்களான இவர்களின் சிறை வாழ்வை படம்பிடித்துக் காட்டுமா? செல்வி, கேசவன் போன்றோரிடம் இருந்து குறைந்தது இரண்டு நிமிட பேட்டியைத்தானும் வெளிக் கொணருமா?

மனிதாபிமானமுள்ள சாதாரண ஒரு பொது மனிதன் என்ற உணர்வோடு ஒளிவீச்சு வீடியோ இதழை நோக்குவோமாயின்....

அதில் மேம்பட்டு நிற்கும், கலைத்துவத்தையும், அத்துடன் குழைந்து போன இசையையும், ஒளிப்பதிவுத் திறனையும் மீறி மேற்படி கேள்விகளும், இவை போன்ற விடையற்ற இன்னும் பல வினாக்களும் எமது இதயத்தை அழுத்திக் கொள்ளவே செய்யும்.

***–லோகதாஸ்***



பெரிய கற்களையே திருமணத்திற்கு அம்மி போல் பாவித்ததாகவும், எம்மவர்களுக்கு B அவுஸ்வைஸ் கிடைத்தபின் இலங்கையில் இருந்து அம்மிகள் தருவிக்கப்பட்டதாகவும் இப்போ சுவிசிலேயே அம்மியை செய்துள்ளார்கள் என்றும் தெரிய வந்தது. இன்று சுவிசில் சில மணவறை V.D.O வில் பிரபலமானவர்கள் மாஜி அம்மி வாடகைக்காரர்கள் என்பதும் ஐயர், மணவறை, V.D.O காரர்களே இப்போ அம்மியும் வைத்திருப்பதாகவும் அறிகின்றேன்.

என்ன உலகமடா இது சரி போகட்டும் இந்த அம்மியை ஏன் கல்யாணத்தன்று உபயோகித்தார்கள் என்பது அவர்களுக்கே தெரியாத விடயம். மற்ற தெரியாதவைகள் போல் இதுவும் இருந்துவிட்டுப் போகட்டும். காலம் காலமாக திருமணத்தில் செய்வது அம்மி மிதித்து அருந்ததி பார்ப்பது என்றுதான் நினைக்கிறார்கள் போலும். எமது சடங்குகள் எவ்வளவுக்கெவ்வளவு பெண்களை அடிமைத்தனத்தில் வைத்திருக்க கூறுகின்றன என்பதற்கு அம்மி மிதிப்பதும் நல்ல உதாரணம். அதாவது அம்மிக்கல்லைப் போல் உறுதியாக பெண்களை கற்பு விசயத்தில் இருக்கச் சொல்கிறார்கள். ஊரில் குசினியில் பெண்களே எப்பவும் அம்மியுடன் அரைபடுவதால்போலும் திட்டமிட்டு அந்தக் காலத்திலேயே அம்மியை தெரிவு செய்திருக்கிறார்கள். ஊர் விட்டு ஊர் வந்து கண்டம் விட்டு கண்டம் வந்த தமிழர்களுக்குா் இன்னும் அம்மிச் சிந்தனைதான் வேண்டுமா? அரிச்சந்திரனை கேட்டால் எம்மவர்கள் கலியாண வீட்டிற்கு அம்மிக்கு பதில் கிரைண்டரையே பாவிக்க வேண்டும் என்று கூறுவேன். ஏனென்றால் பெண்களை கொஞ்சம் அம்மியாட்டும் கஸ்டத்தில் இருந்து விடுவித்திருப்பது.ஆனால் அம்மி போல் உறுதி இல்லை என்று யாராவது அடம்பிடித்தால் .......!

***– அரிச்சந்திரன்***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யானை

–வ.ஐ.ச. ஜெயபாலன்

ஓநாய் துரத்தும் மான்கிழையாக
உலகெலாம் சிதறித் தொலையுமென் குடியின்
கடைசி நம்பிக்கைச் சொற்களிலிருந்து
சிறகை விரித்தது கவிதை.
ஈழநாட்டில துப்பாக்கிகளிலும்
மேலைநாட்டில் துடைப்பங்களிலும்
தாளமிட்டு
நாமெலாம் அந்தக் கவிதையைப் பாடினோம்.

ஒடுக்குதல் ஒழிக எனப் பாடும்போதெலாம்
எம் எழுச்சிப் பாடலை அபஸ்வரம் கிழித்தது.
விடுதலை என்று பாடும்போதெலாம்
எம் புரட்சிப் பாடலின் சுருதி குலைந்தது.

யார் சதி செய்பவன்
யார் எம் கனவினுள் மலத்தை எறிபவன்
யார் எம் தலையில் மண்போடுபவன்
பார்த்துச் சொல்லென
வானில் பறக்குமெம் கவிதையைக் கேட்டோம்.

அதுவரை சிறு குயிலாகப் பறந்தநம் கவிதை
மலைக்கழுகாகி
வானமிடறச் சிறகை விரித்தது.
சுவர்க்கத்தையும் நரகத்தையும்
தட்டிக் கேட்டது
'யார் சதி செய்பவன்
யார் நம் தலையில் மண் போடுபவன்'

'ஈழத்தமிழர் யானைகள் போல்' என
தேவர்கள் சொன்னார்.
'ஈழத்தமிழர் வலிய யானைகள் போல்' என
அசுரரும் சொன்னார்.
ஆத்திரமடைந்த நமது கவிதை
தேவர், அசுரர் முகங்களிலெல்லாம்
வசவுகள் உமிழ்ந்தது.

வீடு திரும்பும் வழியில்
புத்தளக் கரையில் பறக்கும் போது
தற்செயலாக கீழே பார்த்தது.
கீழே பார்த்ததும் ஓவென அழுதது
தலையிலும் மார்பிலும் மோதி மோதி
ஒப்பாரி வைத்தது.

நமது கவிதை
நமது முகத்தில் சிறகால் அடித்தது
நமது கவிதை
உலக மக்களின் மனதிலும் தைத்தது.

கீழே
புத்தளத்து உப்புக் களரில்
முட்புதர்களிடை நிழல்காணாது
கண்ணீரோடு அலைந்ததெம்குடி,
'முஸ்லிம்' என்று பழித்து
கச்சைத் துண்டையும் பறித்துக் கொண்டு
ஊரைவிட்டு நாமே விரட்டிய
நம்குடி.

**(ஈழத்தின் வட பகுதியிலிருந்து 1991 இல் தமிழ்ப் போராளிகளால் துரத்தப்பட்ட 70,000 தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.)**